# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை

2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள
பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும்

## பாகம் 3

**31** - வணிகப் புள்ளிவிவரவியல்
**32** - வணிகக் கல்வி
**33** - கணக்கீடு

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை

## 2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும்

# பாகம் 3

**31** - வணிகப் புள்ளிவிவரவியல்

**32** - வணிகக் கல்வி

**33** - கணக்கீடு

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
NETS

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

முழுப்பதிப்புரிமையுடையது.

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும்
பாகம் 3

இலங்கை பரீட்சைத் திணைக்களம்
முதற் பதிப்பு 2018

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

நிதி அனுசரணை

கல்வித்துறை அபிவிருத்தி மானியம் (ESDP) மூலம் வழங்கப்பட்டது.

# பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி

எந்தவொரு கலைத்திட்டத்தின் மூலமும் பெறப்பட்ட அறிவு விளக்கம் என்பவற்றை அளவிடுவதற்குப் பல்வேறு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினுள் எழுத்துப்பரீட்சையே தற்போது பயன்படுத்தப்படும் மிகப் பிரபல்யமான முறையாகும். எழுத்துப் பரீட்சையானது கற்றல், கற்பித்தல் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்துவதுடன் கூட்டுமதிப்பீட்டு முறையியல்களுக்கிடையில் தொடர்புகளை வளர்த்தெடுக்குமென்பதும் அடைவு மட்டத்தைத் தீர்மானிக்க உதவுமென்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

2017 ஆம் ஆண்டில் தரம் 12 இல் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அம்மாணவர்கள் க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக முதன்முறையாக 2019 ஆம் ஆண்டில் தோற்றுவார்கள். திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப 2019 இலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள க.பொ.த (உயர் தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும் அடங்கும் விதத்தில் தயாரிக்கப்பட்ட தொகுப்பு இதுவாகும்.

க.பொ.த (உயர் தர)ப் பாடத்திட்டத்தில் பாட உள்ளடக்க சீர்திருத்தத்துடன் அதற்குப் பொருத்தமான விதத்தில் வினாத்தாளின் கட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்துதல் அவசியமாகும். இதற்கமைய பாடத்தொகுதிகளைத் திரட்டி ஒவ்வொரு பாகங்களாக வினாத்தாள் கட்டமைப்பின் தனித்துவத்தைப் பேணுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அவ்வவ் பாடங்களுக்குரிய நிபுணத்துவக் குழுவினூடாக இந்தக் கட்டமைப்பு தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கமைய முன்னோடி மாதிரி வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கல்வி அளவீடும் மதிப்பீடும் பற்றிய நம்பிக்கையும் கவனமும் அதிகளவில் செலுத்தப்படும் இக்கால கட்டத்தில் க.பொ.த.(உயர் தர) மட்டத்தில் அந்த மதிப்பீட்டுப் பணி எவ்வாறு செய்யப்படுகின்றதென்பதை எல்லாச் சமூகத்தினருக்கும் அறிவூட்டுதல் முக்கியமானதாகும். க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை முக்கியமாக சான்றிதழ்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட அடைவுப்பரீட்சையாகும். எனினும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வேறு தேசிய சர்வதேச உயர் கல்வி நிறுவனங்கள் என்பன இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதன் காரணமாக இது தெரிவுப் பரீட்சையின் பண்புகளையும் கொண்டு விளங்குகிறது. அதனால் இப்பாகத்தில் தரப்படும் வினாத்தாள் கட்டமைப்பு, மாதிரி வினாக்கள், மாணவர்கள் இப்புதிய பாடத்திட்டத்திற்கமைய எவ்வாறான மதிப்பீட்டுப் பரீட்சைக்கு முகங்கொடுப்பது என்பதை விளக்கிக் கொள்வதற்காகவாகும். இதனால் மாணவர்களைப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழிகாட்டல்களை மேற்கொள்வோருக்கும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் இது துணைபுரிவதாக அமையும்.

இந்த அறிவுரைப்பு நூலில் பகுதி I இல் பரீட்சை பற்றிய பொதுத்தகவல்களும் பகுதி II இல் வினாத்தாள்களின் கட்டமைப்பும் இயல்பும் பகுதி III இல் ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய முன்னோடி மாதிரி வினாக்களும் இடம் பெற்றுள்ளன.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள வினாத்தாள் கட்டமைப்பு, முன்னோடி மாதிரி வினாத்தாள் என்பவற்றைத் தயாரிக்கும்போது ஒத்துழைப்பை நல்கிய கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் குழுவுக்கும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட செயற்குழுவினருக்கும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட செயற்குழுவினருக்கும் அனைத்து பாடங்களுக்கும் உரிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களுக்கும் வளவாளர்களுக்கும் இலங்கைப் பரீட்சை திணைக்கள ஆய்வு அபிவிருத்திக் கிளையின் அலுவலர்கள் மற்றும் செயற்குழுவினருக்கும் அச்சக மேற்பார்வையாளர் உள்ளிட்ட செயற்குழுவினருக்கும் இப்பணியைச் செவ்வனே நிறைவு செய்வதற்கு உலக வங்கியின் கல்வித்துறை அபிவிருத்தி நிதியம் (ESDP) மூலம் மானியம் வழங்கிய குழுவினருக்கும் அச்சுப்பதிப்பு செய்த விஷ்வ கிராபிக் நிறுவனத்துக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2018.10.10
ஆய்வு அபிவிருத்திக் கிளை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | : | திரு. பீ.சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | : | திருமதி. காயத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர் (ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| பாட இணைப்பாளர் | : | திரு. ஜே. ஏ. ஜே. ஆர். ஜயக்கொடி<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| உதவி இணைப்பாளர் | : | என். என். சூரியஆரச்சி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர்<br><br>ஏ. கிருஷ்ணகோபி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர்<br><br>பீ. ருக்மல் மகேஷ் பெரேரா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர்<br><br>பி. ஏ. வெனுர சந்திக<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| கணினி பக்க வடிவமைப்பு | : | காஞ்சனா சுப்ரமணியம்<br>கணினி தரவுப் பதிவாளர்<br><br>எஸ். இந்துஷா<br>கணினி தரவு உதவியாளர் |
| முன்பக்க அட்டை | : | எஸ்.எச். சமன் குமார<br>முகாமைத்துவ உதவியாளர் |

## உள்ளடக்கம்

பக்க இலக்கம்


பகுதி I

பரீட்சைகள் தொடர்பான பொதுத் தகவல்கள் ........................................................... 1

பகுதி II

வினாத்தாள் கட்டமைப்பும் அதன் இயல்பும் ........................................................... 7

பகுதி III

மாதிரி வினாக்கள் ........................................................... 8

(31) வணிகப் புள்ளிவிவரவியல் ........................................................... 10

(32) வணிகக் கல்வி ........................................................... 25

(33) கணக்கீடு ........................................................... 43

இணைப்பு 01 ........................................................... 71

இணைப்பு 02 ........................................................... 97

இணைப்பு 03 ........................................................... 103

## பகுதி I
## கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சை
### பரீட்சை தொடர்பான பொதுத் தகவல்கள்

**1.** அறிமுகம்

இலங்கையின் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப்படுத்தும் பரீட்சையாக க.பொ.த (உ.தர)ப் பரீட்சை உள்ளது. இது முக்கியமாக சான்றிதழ்ப்படுத்தும் பரீட்சையாக நடைபெற்ற போதும் பல்கலைக்கழகங்கள், வேறு உயர்கல்வி நிறுவனங்கள், கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றிற்குத் தகைமைத் தெரிவு செய்வதற்கும் இப்பரீட்சையின் பெறுபேறு அடிப்படையாகக் கொள்ளப்படுவதால் இது ஒரு தேர்வுப் பரீட்சையாகவும் கருதப்படுகிறது.

இது போன்றே நடுத்தர மட்டத்தில் தொழிலைப் பெறுவதற்கும் இப்பரீட்சைப் பெறுபேறுகள் அடிப்படைத் தகைமையாகக் கருதப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டு வரை க.பொ.த (உ.தர)ப் பரீட்சை தரம் 12, 13 என்பவற்றின் பாடத்திட்டத்தினை அடிப்டையாகக் கொண்டு உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை என நான்கு பாடத்துறைகள் இடம் பெற்றதுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தொழினுட்பவியல் பாடத் துறையின் கீழும் பரீட்சை நடைபெற்றது. இதற்கமைய உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை, பொறியியல் தொழினுட்பவியல், உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் எனும் பாடத்துறைகளிலும் பரீட்சைகள் நடைபெறும்.

**2** **பரீட்சைக்கு விண்ணப்பித்தல்**

**2.1** **பாடசாலைப் பரீட்சார்த்திகள்**

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் தகைமையை நிறைவு செய்த பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது பெயர், விண்ணப்பிக்கும் பாடங்கள், மொழிமூலம் ஆகிய தகவல்களுடன் அதிபரினூடாக விண்ணப்பத்தை முன்வைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகளின் பெயர், பிறப்புச் சான்றிதழில் காணப்படும் விதத்தில் சரியாகப் பூரணப்படுத்தப்படுவதுடன், பாடங்கள், பாட இலக்கங்கள், மொழிமூலம் என்பனவும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

**2.2** **தனிப்பட்ட பரீட்சார்த்திகள்**

பாடசாலை மட்ட புதிய மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வகுப்பறையில் மதிப்பீடு செய்தல் வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கு உரியதன்று. கல்வி அமைச்சின் இல ED/01/12/12/05/08/i , 2017.10.31 திகதி கடிதம் மூலம் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (இணைப்பு 03)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு செய்திப் பத்திரிகைகளில் வெளியாகும் அறிவித்தல் மூலம் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்காக விண்ணப்பங்கள் கோரும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள பரீட்சார்த்திகள் உரிய விதத்தில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு செய்திப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்த குறித்த தினத்திற்கு முன்னர் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**3. பாடங்களைத் தெரிவு செய்தல்**

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட இல 2016/13, 2016.04.26 ஆம் திகதி **"க.பொ.த (உ.தர) பாட மறுசீரமைப்பு பல்கலைக்கழக நுழைவுக்கான பாட மறுசீரமைப்பு"** ஆகிய சுற்று நிருபங்கள் (இணைப்பு 01) என்பவற்றுக்கேற்ப இப்பரீட்சையில் பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

க.பொ.த (உ.தர) புதிய பாடத்திட்டம் 2017 ஆம் ஆண்டு தரம் 12 இல் அறிமுகப்படுத்தப்படுவதுடன் இப்பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முதல் தடவையாக க.பொ.த (உ.தர) ப் பரீட்சை 2019 ஆம் ஆண்டில் நடைபெறும். மேலே குறிப்பிடப்பட்ட 2016/13 சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை, பொறியியல் தொழினுட்பவியல், உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் ஆகிய பாட நெறிகளுக்கு அமைந்த பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக பிரதான பாடங்கள் மூன்றினுக்குத் தோற்றுவதுடன் பல்கலைக்கழக நுழைவை எதிர்பார்க்கும் மாணவர்கள் "பொதுப் பரீட்சை" வினாத்தாளிலும் சித்தியடைதல் வேண்டும். பல்கலைக்கழக நுழைவினைக் கவனத்தில் கொள்ளாவிடினும் ' பொது ஆங்கிலம்' வினாத்தாளுக்கு மாணவர்கள் தமது விருப்பின் பேரில் தோற்ற முடியும்.

**3.1 க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட பாடங்கள்**

அனைத்து பாட நெறிகளுக்காகவும் மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டிய பாட மறுசீரமைப்பு பற்றிய ஒப்பந்த இணைப்பு 01 இல் அடங்கும் இல 2016/13 சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட பாடங்களும் பாட இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது அவற்றுக்குரிய பாட இலக்கங்களும் பயன்படுத்தப்பட வேண்டும்.

| | பாடம் | பாட இலக்கம் | |
|---|---|---|---|
| (01) | பௌதிகவியல் | 01 | |
| (02) | இரசாயனவியல் | 02 | |
| (03) | கணிதம் | 07 | |
| (04) | விவசாய விஞ்ஞானம் | 08 | |
| (05) | உயிரியல் | 09 | |
| (06) | இணைந்த கணிதம் | 10 | |
| (07) | உயர் கணிதம் | 11 | |
| (08) | சாதாரண பொதுப்பரீட்சை | 12 | |
| (09) | சாதாரண ஆங்கிலம் | 13 | |
| (10) | குடிசார் தொழினுட்பவியல் | 14 | |
| (11) | பொறிமுறைத் தொழினுட்பவியல் | 15 | |
| (12) | மின், இலத்திரனியல், தகவல் தொழினுட்பவியல் | 16 | |
| (13) | உணவுத் தொழினுட்பவியல் | 17 | |
| (14) | விவசாயத் தொழினுட்பவியல் | 18 | |
| (15) | உயிர்வளத் தொழினுட்பவியல் | 19 | |
| (16) | தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் | 20 | |
| (17) | பொருளியல் | 21 | |
| (18) | புவியியல் | 22 | |
| (19) | அரசியல் விஞ்ஞானம் | 23 | |
| (20) | அளவையியலும் விஞ்ஞான முறையும் | 24 | |
| (21) | இலங்கை வரலாறு | 25 | வினாத்தாள் I |
| (22) | இந்திய வரலாறு | 25A | வினாத்தாள் II |
| (23) | ஐரோப்பிய வரலாறு | 25B | |
| (24) | நவீன உலக வரலாறு | 25C | |
| (25) | மனைப் பொருளியல் | 28 | |
| (26) | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | 29 | |
| (27) | வணிகப் புள்ளிவிபரவியல் | 31 | |
| (28) | வணிகக் கல்வி | 32 | |
| (29) | கணக்கீடு | 33 | |

| | | |
|---|---|---|
| (30) | பௌத்தம் | 41 |
| (31) | இந்து சமயம் | 42 |
| (32) | கிறிஸ்தவம் | 43 |
| (33) | இஸ்லாம் | 44 |
| (34) | பௌத்த நாகரிகம் | 45 |
| (35) | இந்து நாகரிகம் | 46 |
| (36) | இஸ்லாமிய நாகரிகம் | 47 |
| (37) | கிரேக்க உரோம நாகரிகம் | 48 |
| (38) | கிறிஸ்தவ நாகரிகம் | 49 |
| (39) | சித்திரக்கலை | 51 |
| (40) | நாட்டியம் (தேசிய) | 52 |
| (41) | நாட்டியம் (பரதம்) | 53 |
| (42) | சங்கீதம் (கீழைத்தேய) | 54 |
| (43) | சங்கீதம் (கர்நாடகம்) | 55 |
| (44) | சங்கீதம் (மேலைத்தேய) | 56 |
| (45) | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | 57 |
| (46) | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 58 |
| (47) | நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | 59 |
| (48) | எந்திரவியல் தொழினுட்பவியல் | 65 |
| (49) | உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | 66 |
| (50) | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 67 |
| (51) | சிங்களம் | 71 |
| (52) | தமிழ் | 72 |
| (53) | ஆங்கிலம் | 73 |
| (54) | பாளி | 74 |
| (55) | சம்ஸ்கிருதம் | 75 |
| (56) | அரபு | 78 |
| (57) | மலாய் | 79 |
| (58) | பிரெஞ்சு | 81 |
| (59) | ஜேர்மன் | 82 |
| (60) | ரஷியன் | 83 |
| (61) | ஹிந்தி | 84 |
| (62) | சீனமொழி | 86 |
| (63) | ஜப்பான் | 87 |

க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்கான மேலுள்ள பாடங்களில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2016/13 சுற்றுநிருபத்துக்கேற்ப பிரதான பாடங்கள் மூன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும். அந்த பிரதான விடயங்கள் தவிர பொதுச் சாதாரணப் பரீட்சை, பொது ஆங்கிலம் ஆகிய இரண்டு பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

*    **பொதுச் சாதாரணப் பரீட்சை (12)**

இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்றின் உள்ளக மாணவராக நுழைவதற்கு இப்பாடத்தில் தீர்மானிக்கப்படும் இழிவளவுப் புள்ளியைப் பெறுதல் அத்தியாவசியமாகும். இத் தகைமையை ஒரு சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக நுழைவுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இவ்விடயத்துக்காகப் பெறப்படும் புள்ளிகள், Z புள்ளி கணிக்கப்படும்போது சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

*    **பொது ஆங்கிலம் (13)**

இப்பாடம் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை தொடர்பான பிரதான பாடம் அன்று. பொது ஆங்கிலத்தில் பெறப்படும் புள்ளியோ சித்தியோ பல்கலைக்கழக நுழைவுக்காகப் பயன்படுத்தப்படமாட்டாது. எனினும் இந்தப் பாடத்தில் பெறும் பெறுபேறு க.பொ.த (உ.தர)ப் பரீட்சைச் சான்றிதழில் தனியாகக் குறிப்படப்படும்.

## 4. தரங்களைத் தீர்மானித்தல்

ஒவ்வொரு பாடத்திலும் பெறப்படும் மொத்தப் புள்ளிகளுக்கமைய பின்வரும் தரங்கள் தீர்மானிக்கப்படும்.

| புள்ளி வீச்சு | தரம் |
|---|---|
| 75 - 100 | A - விசேட சித்தி - (Distinction Pass) |
| 65 - 74 | B - மிகத் திறமைச் சித்தி - (Very Good Pass) |
| 50 - 64 | C - திறமைச் சித்தி - (Credit Pass) |
| 35 - 49 | S - சாதாரண சித்தி - (Ordinary Pass) |
| 00 - 34 | F - சித்தியின்மை - (Fail) |

## 5. பாடசாலை மட்டக் கணிப்பீடு

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட இல 23/2017, 2017.06.01 திகதியிடப்பட்ட "பாடசாலை மட்டக்கணிப்பீடு தரம் 6 - 13 இற்கான 2017 இலிருந்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படல்" எனும் சுற்றுநிருபத்திற்கு (இணைப்பு 02) அமைய இவ்வேலைத்திட்டம் 2017 தொடக்கம் பாடசாலை முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும்.

### 5.1 நோக்கங்கள்

தரம் 12, 13 இல் கல்வி பெறும் மாணவர்களின் க.பொ.த (உ.தர)ப் பரீட்சையில் அளவிட முடியாத ஆற்றல்கள், தேர்ச்சிகள் ஆகியவற்றை கற்றல் கற்பித்தல் செயன்முறை நிகழும் வேளையில் அளவிடலும் இயலுமை இயலாமை என்பவற்றை இனங்கண்டு குறைபாடுகள் உள்ள மாணவர்கள் இருப்பின் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் இதன் நோக்கங்களாகும். இந்த வேலை ஒழுங்கமைப்பின் கீழ் வகுப்பறையில் கற்கும் வேளையில் மாணவர்களைக் கணிப்பீடு செய்வதுடன் மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் குழுச் செயற்திட்டங்களும் கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

### 5.2 கணிப்பீடு நிகழ்த்தப்படும் விதம்

5.2.1 வகுப்பறையில் கற்றலில் ஈடுபடும் பாடங்களுக்காகச் செய்யப்படும் கணிப்பீடு

(அ) வகுப்பறையில் கற்கும் எல்லாப் பாடங்களுக்காகவும் ஒரு தவணையில் ஒரு தடவை கணிப்பீட்டுச் செயன்முறை நிகழ்த்தப்படும்.

(ஆ) பாடசாலை மட்டக்கணிப்பீட்டுக்காக அறிமுகம் செய்யப்பட்ட கற்றல் கற்பித்தல் கணிப்பீட்டு வகைகளைப் பயன்படுத்தலாம்.

(இ) வகுப்பறையில் கற்கும் எல்லாப் பாடங்களுக்கும் ஒரு தவணைக்கு ஒரு சந்தர்ப்பம் வீதம் தரம் 12 இல் 3 தவணைகளுக்கும் மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்கள் 3 ஆகும். தரம் 13 இல் தவணை 1, 2 இற்காக மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்கள் 2 ஆகும். இரண்டு வருடங்களுக்குமான கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்கள் 5 நடத்தப்படும்.

(ஈ) இந்த 05 கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களினதும் சராசரி தரம் 13 இன் இரண்டாம் தவணை இறுதியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்படும். இந்தப் புள்ளிகளுக்கமைய தீர்மானிக்கப்படும் தேர்ச்சி மட்டம் க.பொ.த (உ.தர)ப் பெறுபேற்று பத்திரத்தில் தனியான நிரலில் பின்வரும் விதத்தில் உள்ளடக்கப்படும்.

| பாடசாலை மட்டக்கணிப்பீடு | தேர்ச்சி மட்டம் | |
|---|---|---|
| 9, 10 | அதிஉயர் தேர்ச்சி மட்டம் | - (Excellent Level Competency) |
| 8 | உயர் தேர்ச்சி மட்டம் | - (High Level Competency) |
| 6, 7 | திறமை தேர்ச்சி மட்டம் | - (Credit Level Competency) |
| 4, 5 | அண்மித்த தேர்ச்சி மட்டம் | - (Near Competency) |
| 1, 2, 3 | தேர்ச்சி மட்டம் அடையப்படவில்லை | - (Not reached the Competency Level) |

### 5.2.2 குழுச் செயற்திட்டம் மூலம் கணிப்பீடு

முதற் தடவையாக க.பொ.த (உ.தர) கற்கும் அனைத்து மாணவர்களும் குழுச் செயற்திட்டத்தை செய்து முடித்தல் வேண்டும்.

#### 5.2.2.1 குழுச் செயற்திட்டம்

(அ) குழுச் செயற்திட்டத்திற்கு 6 மாணவர்கள் தொடக்கம் 10 மாணவர்கள் அடங்கும் ஒரு குழு பாடசாலையில் உரிய ஆசிரியரால் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

(ஆ) குழுச் செயற்பாட்டுக்காக குழுவானது பொருத்தமான தலைப்பை முன்வைத்து அனுமதி பெறுதல் வேண்டும்.

(இ) தரம் 12 இல் 3 தவணைகளும் தரம் 13 இல் முதலாம் தவணையும் உட்பட இச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஈ) குழு உணர்வுடன் செயற்படுதல், பல்வேறு நிறுவனங்களுடனும் தனியாள்களுடனும் செயற்படுதல், துறைசார் நடவடிக்கைகள் பற்றிய விளக்கம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் இச் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும்.

#### 5.2.2.2 செயற்திட்டத்தை கணிப்பிடுதல்

(அ) 5 நியதிகளின் கீழ் செயற்திட்டம் மதிப்பீடு செய்யப்படுவதுடன் ஆசிரியர் ஒவ்வொரு நியதிக்கும் அமைய மாணவர் செயற்பட்ட விதத்தினை அவதானித்து புள்ளிகள் வழங்குதல் இடம்பெறும்.

(ஆ) செயற்திட்டத்துக்கான மொத்தப்புள்ளிகள் 20 வழங்கப்படுவதுடன் அப்புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டு 10 ஆக மாற்றப்படும்.

(இ) இச் செயற்திட்டத்தின் புள்ளிகளுக்கேற்ப தீர்மானிக்கப்படும் தேர்ச்சி மட்டம் 5.2.1 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப க.பொ.த. (உ.த) பெறுபேற்று பத்திரத்தில் உள்ளடக்கப்படும்.

# பகுதி II

## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள பரீட்சைக்கான வினாத்தாள் கட்டமைப்பு

<table>
<tr><th rowspan="3">பாடங்களும் பாட இலக்கங்களும்</th><th colspan="5">வினாத்தாள் I</th><th colspan="9">வினாத்தாள் II</th></tr>
<tr><th rowspan="2">** நேரம் (மணித்தியாலம்)</th><th rowspan="2">*வினாவின் தன்மை</th><th rowspan="2">தெரிவுகளின் எண்ணிக்கை</th><th rowspan="2">வினாக்களின் எண்ணிக்கை</th><th rowspan="2">விடையளிக்கவேண்டிய வினாக்களின் எண்ணிக்கை</th><th rowspan="2">** நேரம் (மணித்தியாலம்)</th><th colspan="4">பகுதி I</th><th colspan="3">பகுதி II</th><th rowspan="2">விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை</th></tr>
<tr><th>*வினாவின் தன்மை</th><th>வினாக்களின் எண்ணிக்கை</th><th>கட்டாய வினாக்களின் எண்ணிக்கை</th><th>தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை</th><th>*வினாவின் தன்மை</th><th>வினாக்களின் எண்ணிக்கை</th><th>தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>(31) வணிகப் புள்ளிவிவரவியல்</td><td>2</td><td>1</td><td>5</td><td>50</td><td>50</td><td>3</td><td>3</td><td>4</td><td></td><td>2/4 அல்லது 3/4</td><td>3</td><td>4</td><td>2/4 அல்லது 3/4</td><td>5/8</td></tr>
<tr><td rowspan="2">(32) வணிகக் கல்வி</td><td rowspan="2">2</td><td>1</td><td>5</td><td>30</td><td rowspan="2">50</td><td rowspan="2">3</td><td rowspan="2">3</td><td rowspan="2">4</td><td rowspan="2"></td><td rowspan="2">2/4 அல்லது 3/4</td><td rowspan="2">3</td><td rowspan="2">4</td><td rowspan="2">2/4 அல்லது 3/4</td><td rowspan="2">5/8</td></tr>
<tr><td>2</td><td></td><td>20</td></tr>
<tr><td rowspan="2">(33) கணக்கீடு</td><td rowspan="2">2</td><td>1</td><td>5</td><td>30</td><td rowspan="2">50</td><td rowspan="2">3</td><td rowspan="2">3</td><td rowspan="2">6</td><td rowspan="2">2</td><td rowspan="2">3/4</td><td rowspan="2"></td><td rowspan="2"></td><td rowspan="2"></td><td rowspan="2">5/6</td></tr>
<tr><td>2</td><td></td><td>20</td></tr>
</table>

* வினாவின் தன்மை

1. பல்தேர்வு
2. வேறு குறுவிடை வகை
3. கட்டமைப்பு
4. பகுதிக் கட்டமைப்பு
5. கட்டுரை வகை
6. செய்முறை

** **மூன்று** மணித்தியாலங்கள் நேர அளவு கொண்ட அனைத்து வினாத்தாள்களுக்கும் விடை எழுதுவதற்கு முன்னர் வினாக்களை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்காக **மூன்று மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக 10 நிமிட நேரம்** வழங்கப்படும்.

# பகுதி III
## முன்னோடி மாதிரி வினாத்தாள்

க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை சிரேஷ்ட இடைநிலைக் கல்வி இறுதியில் நடத்தப்படும் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். இப்பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், கல்வியிற் கல்லூரிகள் ஆகிய நிறுவனங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தல் நடைபெறுவதால் இது ஒரு தெரிவுப் பரீட்சையின் பண்புகளையும் கொண்டதாக விளங்குகிறது.

இதற்கமைய க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்கும்போது அடைவுப் பரீட்சையில் காணப்படக் கூடிய பண்புகளில் அதிக கவனம் செலுத்தப்படுவதுடன் இப்பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள், வேறு உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தலும் இடம் பெறுவதால் இவை பற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதற்கேற்ப மாணவர்களின் அடைவை மதிப்பீடு செய்வதற்கு எழுத்துப் பரீட்சை முறைகளில் முக்கிய இடத்தை கட்டுரைவகைச் சோதனைகளும் புறவயச் சோதனைகளும் (பாடத்துடன் இணைந்ததாக) பயன்படுத்தப்படுகின்றன. கட்டுரை வகையிலான விடைகளில் பரீட்சகர்களின் தனியாள் இயல்பு செல்வாக்குச் செலுத்துவதுடன் புறவயச் சோதனை வினாக்களில் ஒரு சரியான விடை மட்டும் காணப்படுவதால் அது முழுமையாகத் தனியாள் அகவயத் தன்மையற்றதாகக் காணப்படும். இக்கட்டுரை வகை, புறவய சோதனை இரண்டிற்கும் இடையில் "குறு விடை வினாக்கள், அமைப்புக் கட்டுரை வினாக்கள்" என்பவற்றிலும் தற்போது பரீட்சகர்களின் கவனம் செலுத்தப்படுகிறது. அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு வழங்க வேண்டிய விடைகள் வினாவில் குறிப்பிடப்படும் சில வரையறையினுள் அமையுமாறு கட்டுப்படுத்தப்படும். இதற்கேற்ப விடைகளுக்குப் புள்ளி வழங்கும்போது பரீட்சைகளுக்கிடையில் புள்ளி வழங்கலில் சமநிலைத் தன்மையைப் பாதுகாக்கக் கூடியதாக இருப்பதால் புறவயவகை வினாக்கள், அமைப்புக் கட்டுரை வகை வினாக்கள் என்பன பரீட்சைத் துறையில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

அதற்கமைய க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்கான வினாக்களைத் தயாரிக்கும்போது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே கட்டுரை வகை வினாக்களைப் பயன்படுத்துவதுடன் புறவய வினாக்களைத் தயாரிப்பதில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. இதுபோலவே க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை வினாக்களைத் தயாரிக்கும்போது நினைவாற்றலான அறிவை மட்டுமன்றி கிரகித்தல், பிரயோகம், பகுப்பாய்வு, தொகுப்பு, மதிப்பீட்டு ஆகிய உயரிய உளத்திறன்களையும் அளவிடக்கூடிய விதத்தில் வினாக்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. இயலுமானவரையில் செய்முறையுடன் தொடர்பான வினாக்களைத் தயாரிப்பதினூடாக மாணவர் யாதாயினும் ஒன்றை விளக்கமாக அறிந்து கொள்ளல் கற்றல் கோட்பாடுகளை அதுபோன்றே வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்துதல், பிரச்சினை தீர்த்தல், தர்க்க ரீதியாக சிந்தித்தல், புதிய ஆலோசனைகள் / திட்டங்களை முன்வைத்தல், விடயங்களை ஒப்பீடு செய்தல், மொழியைச் சிறந்த விதத்தில் கையாளுதல், கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தல் ஆகிய திறன்கள் மாணவர்களிடத்தில் எந்தளவில் விருத்தியடைந்துள்ளது என்பதை அளவிடும் விதத்திலும் வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

இப்பகுதி III இல் வினாத்தாள் கட்டமைப்பு புள்ளிகள் வழங்கும் விதம் என்பவற்றுடன் முன்னோடி மாதிரி வினாக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் இவை மாதிரி வினாப்பத்திரங்களல்ல. எனவே வினாப்பத்திரங்களைத் தயாரிக்கும்போது வினாக்களில் அடங்கியுள்ள **உபபகுதிகளின் எண்ணிக்கை புள்ளிகள் வழங்கப்பட வேண்டிய விதம்** என்பன வினாக்கள் தயாரிப்பதற்கு அடிப்படையான பாடப்பகுதிகளுக்கேற்பவும் சந்தர்ப்பங்களுக்கேற்பவும் **மாற்றமுடைய இடமுண்டு.**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முன்னோடி மாதிரி வினாக்கள் தவிர புறவயவகை வினாக்கள் கட்டுரைவகை வினாக்கள் என்பன பரீட்சைக்காகப் பயன்படுத்தப்படும். **பக்கம் 9 இல் குறிப்பிடப்படும் எல்லா வினா வகைகளும் வேறு வினா வகைகளும் க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்களில் சந்தர்ப்பங்களுக்கேற்ப உள்ளடக்கும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குரியதாகும்.**

புறவய சோதனைகள் (Objective Tests)

- வழங்கல் வகை (Supply Type)
- தெரிதல் வகை (Selection Type)
  - இணைக்கும் வகை (Matching Type)
  - இரு தேர்வு வகை (Alternative Type)
  - பல்தேர்வு வகை (MCQ Type)
    - வினா வகை (Question Type)
    - பூரணமற்ற வாக்கிய வகை (Incomplete Statement Type)
    - எதிர்மறையான வகை (Negative Type)
    - கூட்டு வகை (Combined Response Type)
    - சிறந்த விடை வகை (Best Answer Type)
    - பல விடை வகை (Multiple Response Type)
    - பொதுவிடை வகை (Common Response Type)
    - பிரதியீட்டு வகை (Substitution Type)
    - சோடிக் கூற்று வகை (Double Statement Type)
    - கூற்றும் காரணமும் வகை (Assertion & Reason Type)

**கட்டுரை வகை சோதனைகள் (Essay Tests)**

- கட்டுரை வகை வினாக்கள் **(Essay Type Questions)**
  - திறந்த துலங்கல் வகை (Open Response Type)
  - கட்டுப்பட்டுத்தப்பட்ட துலங்கல் வகை (Controlled Response Type)
- அமைப்புக் கட்டுரை வகை வினாக்கள் **(Structured Essay Type Questions)**
  - உப விரிவுகள் மூலம் கட்டமைப்பாக்கல் (Structuring by using subsections)
  - வழங்கும் தகவலினூடு கட்டமைப்பாக்கல் (Structuring by information provided)
  - செயல் மூலம் கட்டமைப்பாக்கல் (Structuring by function)

# (31) வணிகப் புள்ளிவிவரவியல்

## வினாத்தாள் கட்டமைப்பு

**வினாப்பத்திரம்** I - **நேரம் : 2 மணித்தியாலங்கள்**
**5** தெரிவுகளுடன் கூடிய பல்தேர்வு வினாக்கள் **50** ஐ உள்ளடக்கியுள்ளது. **சகல வினாக்களுக்கும்** விடையளிக்க வேண்டும். ஒரு வினாவிற்கு **01** புள்ளிகள் வீதம் **மொத்தப்புள்ளிகள் 50** ஆகும்.

**வினாப்பத்திரம்** II - **நேரம் : 3 மணித்தியாலங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்களாகும்)
இவ்வினாப்பத்திரம் **இரு** பகுதிகளை உள்ளடக்கியது.
பகுதி I - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்கள் **நான்காகும்**.
பகுதி II - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்கள் **நான்காகும்**.

ஒரு பகுதியிலிருந்து ஆகக் குறைந்தது **02** வினாக்களையேனும் தெரிவு செய்து **05** வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு **20** புள்ளிகள் வீதம் **மொத்தப்புள்ளிகள் 100** ஆகும்.

இறுதிப்புள்ளியினைக் கணித்தல் :

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | | = 50 |
| வினாப்பத்திரம் II | = 100 ÷ 2 | = 50 |
| இறுதிப்புள்ளி | | = 100 |

## வினாத்தாள் I

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
* **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுக்க.
(பரீட்சையில் விடை எழுதுவதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.)

---

**1.** பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானது?

(1) தரவுகளை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் என்பவற்றின் மூலம் முடிவுகளை மேற்கொள்ளல் விபரண புள்ளிவிவரவியல் என அழைக்கப்படும்.
(2) புள்ளி விவரவியலில் பண்பு ரீதியான தரவுகள் கையாளப்படுவதில்லை.
(3) மாதிரிகள் ஆய்வின் ஊடாக குடி பற்றிய முடிவினை எடுப்பது புள்ளிவிவரவியலில் ஒரு வரையறையாகும்.
(4) புள்ளிவிவரவியல் முற்றிலுமாக சரியான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.
(5) புள்ளிவிவரவியலில் எப்பொழுதும் தீர்மானங்கள் மாதிரிக்களஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

**2.** பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

A - எண் தரவுகள் பெயர்அளவிலான அளவீட்டு தரவுகளில் பயன்படுத்தப்படுவதில்லை.
B - ஆயிடை அளவுத்திட்ட தரவுகளில் உண்மைப்பூச்சியம் பிரயோகிக்கப்படுவதில்லை.
C - வரிசைநிலைத் தரவுகளில் கணித செய்முறைகளை பயன்படுத்த முடியாது

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும் (4) Aயும் B மட்டும் (5) Bயும் C மட்டும்

**3.** பின்வரும் கூற்றுக்களில் எது **உண்மையற்றது**?

(1) நேரடி அவதானிப்பு முறையில் நவீன இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்த முடியும்.
(2) கணினி மென்பொருளை பயன்படுத்தி தரவுகளை சேகரித்தல் உயர்தொழில்நுட்ப சூழலின் கீழ் மிகவும் பொருத்தமானது.
(3) தரவுகள் சேகரித்தலில் குவிமயமாக்கப்பட்ட குழுமுறையை பயன்படுத்தி முடிவுக்கு வருதல் இலகுவானதாக இருக்கும்.
(4) தனிநபர் நேர்காணல் முறையில் சேகரிக்கப்பட்ட தரவுக்ள சுயகணக்கெடுப்பு முறையுடன் ஒப்பிடும்போது அதிக நம்பகத்தன்மை வாய்ந்ததாக இருக்கலாம்.
(5) முன்னோடிக்களாய்வில் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு ஆய்வினை நன்றாக திட்டமிட முடியும்.

**4.** ஒரு கூட்ட மாணவர்களின் நிறையானது பின்வரும் தண்டு - இலை வரைபடத்தில் காட்டப்படுகின்றது.

| தண்டு | இலை |
|---|---|
| 3 | 7, 9 |
| 4 | 1, 3, 4, 6, 8, 9 |
| 5 | 0, 1, 3, 4, 5, 5, 6, 9 |
| 6 | 1, 3, 4, 7 |

இத்தரவுத் தொகுதியின் மூன்றாம் காலணையானது?

(1) 44.5 (2) 56 (3) 57.5 (4) 58.0 (5) 58.25

**5.** கடந்த பத்து வருடங்களில் தேயிலை, இறப்பர், தெங்கு என்பவற்றில் இருந்து பெறப்பட்ட ஏற்றுமதி வருமானங்களை ஒவ்வொரு பயிர்களின் சார்பு முக்கியத்துவத்தினை முன்னிலைப்படுத்தும் வகையில் பிரதிபலிப்பதற்கு பொருத்தமான வரைபு,

(1) எளிய சலாகை வரைபு (2) வட்ட வரைபு
(3) பல்தரச் சலாகை வரைபு (4) வீதாசார கூட்டுச் சலாகை வரைபு
(5) கூட்டுச்சலாகை வரைபு

**6.** பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

A - மாதாந்த தரவுகளை பயன்படுத்தி Z வரைபடம் அமைக்கப்படும்போது நகரும் வருடாந்த மொத்த வளையி எப்பொழுதும் அடுத்துவரும் 12 மாதத்தின் மொத்தத்தினை பிரதிபலிக்கின்றது.
B - சமபரம்பல் கோட்டில் இருந்து இரண்டு மாறிகளின் பரம்பலின் விலகலை ஒரு லோறன்ஸ் வளையி மூலம் காட்ட முடியும்.
C - கினிகுணகம் பொதுவாக வருமானம் அல்லது செல்வப்பரம்பல்களின் சமமின்மையை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) Aயும் C மட்டும் (5) Bயும் C மட்டும்

**7.** பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையற்றது?

(1) பெயரளவிலான அளவுத்திட்ட தரவுகளுக்கு அதிக வழக்கமான முறையான மையநாட்ட அளவீடு ஆகாரம் ஆகும்.
(2) இரண்டிற்கு மேற்பட்ட தரவுத் தொடைகளின் இணைந்த இடையினை மாதிரி பருமனை நிறையாகக் கொண்ட நிறையளிக்கப்பட்ட இடையாகக் கொள்ள முடியும்.
(3) ஓராயப்பட்ட பரம்பல்களுக்கு இடை என்பது மிகப் பொருத்தமான மையநாட்ட அளவீடாகும்.
(4) ஒரு நாட்டின் சில வருடங்களிற்கான சராசரி பொருளாதார வளர்ச்சியினை கணிப்பதற்கு பெருக்கல் இடையானது மிகப் பொருத்தமான மையநாட்ட அளவீடாகும்.
(5) எளிய கூட்டல் இடையானது ஒரு தரவுத் தொடையின் ஒவ்வொரு அவதானங்களிற்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்கின்றது.

**8.** ஒரு சில்லறை வியாபாரி இரு வேறுபட்ட குறியீடுகளை உடைய பேனைகளை முறையே ஒரு டசின் 120 ரூபாவிற்கும் மற்றய ஒரு டசின் 180 ரூபாவிற்கும் கொள்வனவு செய்வதற்கு சம அளவான பணத்தை செலவு செய்கிறார் எனின் ஒரு டசின் பேனைகளின் சராசரி விலையானது,

(1) 12.00 ரூபா (2) 12.25 ரூபா (3) 12.50 ரூபா (4) 144.00 ரூபா (5) 150.00 ரூபா

**9.** இருபது அவதானங்களின் கூட்டுத் தொகை 240 ஆகவும், அவ் அவதானங்களின் வர்க்கங்களில் கூட்டுத்தொகை 3380 ஆகும். இத்தரவுத் தொடையின் மாறல் குணகம்,

(1) 4.17% (2) 7.10% (3) 12.00% (4) 24.00% (5) 41.67%

**10.** ஒரு குறித்த பரம்பலின் இடையானது $\overline{x}$ இனாலும் நியம விலகல் S இனாலும் குறிக்கப்படுகின்றது. பின்பு ஒவ்வொரு அவதானிப்புடனும் A என்ற மாறிலி கூட்டப்பட்டு c என்ற இன்னொரு மாறிலியினால் பெருக்கப்படுகின்றது. புதிய பரம்பலின் இடை, நியம விலகல் முறையே,

(1) $C(\overline{x} + A), CS$ (2) $C(\overline{x} + A), C(S+ A)$ (3) $(\overline{x} + C), CS$

(4) $(\overline{x} + A), CS$ (5) $C\overline{x}, C(S+A)$

**11.** $(Q_3 - Q_2) = ½ (Q_2 - Q_1)$ இனை உடைய மீடிறன் பரம்பலானது,

(1) சமச்சீரானது (2) நேர் ஓராயமானது (3) எதிர் ஓராயமானது

(4) தாழ்குடிலம் (5) உயர்குடிலம்

**12.** பிற்செலவு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

A - இருமாறிகளின் தொடர்பின் திசையானது பிற்செலவு குணகத்தின் குறியீட்டினால் குறிக்கப்படுகின்றது.
B - பிற்செலவு மாதிரி உருவின் பொருத்தப்பாடானது துணிவுக் குணகத்தினால் மதிப்பிடுகின்றது.
C - துணிவுக் குணகத்தின் வீச்சானது -1 இற்கு +1 இடையில் காணப்படும்.

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும் (4) Aயும் B மட்டும் (5) A யும் C மட்டும்

**13.** எட்டு சோடிப் பெறுமதிகளைப் பயன்படுத்தி X இன் மீதான Y யினது பிற்செவுக் கோடு ஒரு மாணவனால் பொருத்தப்படுகிறது. பின்வரும் பெறுமதிகள் இம் மாணவனால் கணிக்கப்பட்டுள்ளன.

$\sum X = 56$ $\sum Y = 294$ $\hat{b} = -2.34$ எனின் பிற்செலவுக் கோட்டின் சரியான சமன்பாடானது,

(1) $\hat{Y} = 16.38 - 2.34 X$ (2) $\hat{Y} = 20.37 - 2.34 X$ (3) $\hat{Y} = 53.13 - 2.34 X$

(4) $\hat{Y} = 53.13 + 2.34 X$ (5) $\hat{Y} = 92.995 - 2.34 X$

**14.** X, Y என்ற மாறிகளுக்கிடையிலான இணைப்புக் குணகம் - 0.9 ஆகும். X மீதான Y இன் பிற்செலவு குணகம் -2.5 ஆக இருப்பின் Y இன் மீதான X இன் பிற்செலவு குணகம் என்னவாக இருக்கும்.

(1) 0.324 (2) -0.324 (3) 0.810 (4) 3.240 (5) -3.240

**15.** நிகழ்தகவு அணுகுமுறைகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

A - பூர்வகால அணுகுமுறைக்கு இணங்க ஒரு ஆண் குழந்தை பிறப்பதற்கான நிகழ்தகவு ½ ஆகும்.
B - சார்பு மீடிறன் அணுகுமுறையால் பெறப்படுகின்ற நிகழ்தகவின் சரியான தன்மை மீள் நடாத்தப்படும் பரிசோதனைகளின் தடவைகளின் எண்ணிக்கையில் தங்கியிருக்கும்.
C - நிகழ்தகவு பற்றிய கணித அணுகுமுறையில் பரிசோதனையின் விளைவுகள் எண்ணக் கூடியனவாக இருக்க வேண்டும்.

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்

(4) Aயும் B மட்டும் (5) A, B, C எல்லாம்

**16.** ஐந்து கம்பனிகளில் ஒவ்வொன்றிலும் இருந்து 2 நபர்கள் ஒரு செயல் அமர்வில் பங்குபற்றினார்கள். ஐந்து நபர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட இருப்பின் ஐந்து கம்பனிகளும் பிரதிநிதித்துவம் செய்திருப்பதற்கான நிகழ்தகவு

(1) $\frac{5}{252}$ (2) $\frac{16}{252}$ (3) $\frac{32}{252}$ (4) $\frac{5}{10}$ (5) $\frac{8}{10}$

**17.** A, B என்பன ஒன்றிணைந்து மாதிரி வெளியை உருவாக்கும் நிகழ்ச்சிகள் என்க. A இனது நிகழ்தகவானது இரு நிகழ்ச்சிகள் ஒரே நேரத்தில் நிகழ்தகவதற்கான நிகழ்தகவின் இரு மடங்காகும். B நிகழ்ச்சி நிகழ்வதற்கான நிகழ்தகவானது A நிகழ்ச்சி நடைபெறும் நிகழ்தகவின் இருமடங்காகும். நிகழ்ச்சி A நிகழ்வதற்கான நிகழ்தகவு

(1) $\frac{1}{16}$ (2) $\frac{2}{7}$ (3) $\frac{1}{3}$ (4) $\frac{2}{5}$ (5) $\frac{3}{7}$

**18.** A, B என்பன ஏதாவது இரு நிகழ்ச்சிகளாக இருப்பின் $P(A|B)$ என்பது

(1) $P(B'|A)$ (2) $1 - P(A)$ (3) $1 - P(B|A)$ (4) $1 - P(A|B)$ (5) $1 - P(B'|A)$

**19.** X என்ற எழுமாற்று மாறியானது 1, 2, 3, 4 என்ற பெறுமானங்களை மாத்திரம் எடுப்பின், பின்வரும் சார்புகளில் எது X இனது நிகழ்தகவு பரம்பலை பிரதிபலிக்கும்?

(1) $f(x) = \frac{x-2}{2}$ (2) $f(x) = \frac{x-1}{4}$ (3) $f(x) = \frac{x+1}{2}$

(4) $f(x) = \frac{x^2}{15}$ (5) $f(x) = \frac{x+2}{18}$

**20.** ஈருறுப்பு முயல்வுகளின் எண்ணிக்கை 6 ஆகவும் $4P(x = 4) = P(x = 2)$ ஆகவும் இருப்பின் வெற்றிக்கான நிகழ்தகவு

(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{3}$ (3) $\frac{1}{2}$ (4) $\frac{2}{3}$ (5) $\frac{3}{4}$

**21.** புவசோன் எழுமாற்று மாறி x இற்கு $P(x = 0) = P(x = 1)$ ஆக இருப்பின் இப்பரம்பலின் இடையானது

(1) $\frac{1}{e}$ (2) $\sqrt{e}$ (3) 1 (4) e (5) $e^2$

**22.** ஒரு வகையான மின்குமிழின் வாழ்வுக்காலம் X ஆனது 4000 மணித்தியாலங்களை இடையாகவும் 400 மணித்தியாலங்களை நியம விலகலாகவும் கொண்ட ஒரு செவ்வன் பரம்பலை கொண்டிருக்கின்றது எனின் $P(x \geq a) = 0.9$ ஆகுமாறு $a$ ஐ காண்க.

(1) 3344 (2) 3488 (3) 4512 (4) 4656 (5) 4784

**23.** பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானது?

(1) குடியின் மாறல் பெரிதாக உள்ளபோது எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு மிகவும் பொருத்தமானது.
(2) நிகழ்தகவு மாதிரி எடுப்பில் ஒவ்வொரு குடியலகும் மாதிரியில் உள்ளடக்கப்படுதவற்கான நிகழ்தகவு சமமாகும்.
(3) படைகளுக்கு இடையிலான மாறல் அதிகமாக இருக்கும்போது படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பாய்வு முறை மிகவும் பொருத்தமானது.
(4) மாதிரி எடுப்புச்சட்டம் எழுமாற்று வரிசையில் உள்ளபோது முறைமையான மாதிரி எடுப்பு எளிய எழுமாற்று மாதிரி எடுப்பைவிட சிறந்த பெறுபேற்றினைத் தரும் என எதிர்பார்க்க முடியும்.
(5) உள்ளக வகுப்பு இணைப்புக் குணகம் சிறிதாக இருந்தால் கொத்து மாதிரி எடுப்பு பொருதத்மானது.

**24.** பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

A - குறித்த துறையில் நிபுணத்துவம் உள்ளவர்களால் எடுக்கப்படும் மாதிரி எடுப்பு தீர்வு மாதிரி எடுப்பு எனப்படும்.

B - எழுமாற்று அல்லாத மாதிரி எடுப்புடன் ஒப்பிடும்போது எழுமாற்று மாதிரி எடுப்பில் தனிநபர் கோடல் தன்மை குறைவாக இருக்கும்.

C - பங்குவீதமாதிரி எடுப்பானது நிகழ்தகவு அல்லாத படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பாக கருத முடியும்.

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) Bயும் C யும் மட்டும் (5) A, B, C எல்லாம்

**25.** பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானது?

(1) நிகழ்தகவு மாதிரியெடுப்பில் ஒரு மாதிரி இடையின் நியமவழு ஒரு மாதிரி இடையத்தின் நியம வழுவைவிட பெரிதாக இருக்கும்.
(2) மாதிரிப் பருமனை அதிகரிப்பதன் மூலம் எழுமாறல்லாத மாதிரி எடுப்பு வழுவினை குறைக்கப்பட முடியும்.
(3) மாதிரி எடுப்பு பின்னம் சிறிதாக உள்ளபோது முடிவுள்ள குடிக்கான திருத்தக் காரணி 1 இற்கு அண்மித்ததாக இருக்கும்.
(4) ஒரு குடியிலிருந்து ஒரு மாதிரிக்காக தெரிவுசெய்யப்பட்ட அலகு மாதிரி எடுப்பு அலகு எனப்படும்.
(5) தெளிவான மாதிரி எடுப்புச் சட்டகம் இல்லாமை மாதிரி எடுப்பு வழுவிற்கான உதாரணமாகும்.

**26.** ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள மக்களின் சராசரி வருமானம் 40,000 ஆகவும் மாறல்திறன் 6,250,000 ஆகவும் உள்ளன. 100 நபர்களை கொண்ட ஒரு எழுமாற்று மாதிரி தெரிவு செய்யப்படின் மாதிரி இடையானது உண்மையான குடியிடையிலிருந்து 400/= வீச்சிற்குள் இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(1) 0.4332 (2) 0.4452 (3) 0.4641 (4) 0.8904 (5) 0.9282

**27.** 500 பருமன் கொண்ட குடியினது மாறல் திறன் 64 இந்த குடியிலிருந்து 50 பருமன் கொண்ட எழுமாற்று மாதிரி தெரிவு செய்யப்படின் மாதிரி இடையின் நியம வழுவானது

(1) $\frac{8}{\sqrt{50}}$ (2) $\frac{64}{\sqrt{50}}$ (3) $\frac{24}{\sqrt{499}}$ (4) $\frac{72}{\sqrt{499}}$ (5) $\frac{192}{\sqrt{499}}$

**28.** A பிரதேசத்தில் இருந்து 40% ஆன மக்கள் B பிரதேசத்தில் இருந்து 50% ஆன மக்கள் இணைய வசதியை கொண்டு இருக்கிறார்கள். இந்த பிரதேசங்களின் ஒவ்வொரு பிரதேசத்திலும் இருந்து 100 பருமன் கொண்ட எழுமாற்று மாதிரி எடுக்கப்பட்டால் இணைய வசதி உடைய மாதிரி விகிதங்களின் வித்தியாசத்திற்கான மாதிரி எடுப்பு பரம்பல் ஆனது

(1) இடை 0.1 ஐயும் நியம விலகல் 0.7 ஐயும் உடைய செவ்வன் பரம்பலில் அமைந்திருக்கும்.
(2) இடையானது 0.1 ஐயும் நியம விலகல் 0.07 ஐயும் உடைய செவ்வன் பரம்பலில் அமைந்திருக்கும்.
(3) இடையானது -0.1 ஐயும் நியம விலகல் 0.7 ஐயும் உடைய செவ்வன் பரம்பலில் அமைந்திருக்கும்.
(4) இடையானது 0.1 ஐயும் நியம விலகல் 0.07 ஐயும் உடைய அண்ணளவான செவ்வன் பரம்பலில் அமைந்திருக்கும்.
(5) இடையானது -0.1 ஐயும் நியம விலகல் 0.07 ஐயும் உடைய அண்ணளவான செவ்வன் பரம்பலில் அமைந்திருக்கும்.

**29.** 12 இனை இடையாகக் கொண்ட புவசோன் பரம்பலில் இருந்து மாதிரிப் பருமன் 48 ஐ உடைய எழுமாற்று மாதிரி ஒன்று எடுக்கப்படின் மாதிரி இடையானது 13 இலும் அதிகமாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(1) 0.0228 (2) 0.1587 (3) 0.6587 (4) 0.4772 (5) 0.9772

**30.** பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

கூற்று A - ஒரு குடிப்பரமானத்திற்கான சாத்தியமான எல்லா கோடாத மாதிப்பான்களுக்கிடையில் குறைந்த மாறல் திறனைக் கொண்ட மாதிப்பான் மிகவும் வினைத்திறன் ஆன மதிப்பான் ஆகும்.

கூற்று B - மாதிரிப்பருமன் அதிகரிக்கும்போது ஒரு கோடலற்ற மதிப்பானின் மாறல் திறன் பூச்சியத்ததை அணுகுமாயின் அது இசைவான மதிப்பான் என அழைக்கப்படும்.

கூற்று C - ஒரு மாதிரியில் பரமானம் பற்றிய எல்லாத் தரவுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் மதிப்பான் போதுமான மதிப்பான் எனப்படும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) B யும் C யும் மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம்

**31.** புள்ளிவிவர மதிப்பீடு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

கூற்று A - 99% நம்பிக்கை ஆயிடையின் அகலம் 95% நம்பிக்கை ஆயிடையின் அகலத்திலும் அதிகமானது.

கூற்று B - மாறற்றிறன் தெரிந்த செவ்வன் குடியினது இடை பற்றிய புள்ளிவிவர அனுமானத்தினை மேற்கொள்வதற்கு t பரம்பல் பயன்படுத்தப்படுகின்றது.

கூற்று C - மாதிரிப் பருமன் பெரிதாக இருந்தால் நம்பிக்கை ஆயிடையின் அகலம் சிறிதாக இருக்கும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A யும் C யும் மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம்

**32.** மாறல்திறன் 100 ஐ உடைய செவ்வன் பரம்பலின் இடை எல்லைவழு 2 ஆகவும் வழுவிற்கான நிகழ்தகவு 5% மாகவும் இருக்கத்தக்கவாறு மதிப்பிடப்படின் தெரிவுசெய்யப்பட வேண்டிய மாதிரி பருமன்

(1) 10 (2) 20 (3) 49 (4) 68 (5) 97

**33.** 100 உருப்படிகளை கொண்ட எழுமாற்று மாதிரியானது ஒரு உற்பத்தியில் இருந்து எடுக்கப்படுகின்றது. எடுக்கப்பட்ட உருப்படிகளில் 10 பழுதடைந்தவை. உண்மையான பழுதுகளின் விகிதத்திற்கான 90% நம்பிக்கை ஆயிடை அமைக்கப்பட்டிருப்பின் அவ்வாயிடையின் மேல் எல்லையானது,

(1) 0.0508 (2) 0.1014 (3) 0.1490 (4) 0.1588 (5) 0.1774

**34.** கருதுகோள் சோதனை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

கூற்று A - பிழையான சூனிய கருதுகோளை மறுப்பதற்கான நிகழ்தகவு வழு வகை 1 ஆகும்.

கூற்று B - வகை 1 வழுவை கட்டுப்படுத்தப்படுகின்ற மட்டமானது நம்பிக்கை மட்டம் என அழைக்கப்படும்.

கூற்று C - உண்மையான மாற்றுக்கருதுகோள் மறுப்பதற்கான நிகழ்தகவு வகை II வழுவின் பருமன்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) Aயும் B யும் மாத்திரம் (5) Bயும் C யும் மாத்திரம்

**35.** பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது?

(1) ஒரு சோதனையின் P பெறுமதியானது 0.05 விட பெரிதாக இருந்தால் Ho ஆனது 5% பொருண்மை மட்டத்தில் மறுக்கப்பட வேண்டும்.
(2) வகை 1 வழு அதிகரிக்கும்போது வகை 11 வழுவும் அதிகரிக்கின்றது.
(3) 10% பொருண்மை மட்டத்துடனான ஒரு கருதுகோள் சோதனை 5% பொருண்மை மட்டத்திலான கருதுகோள் சோதனையிலும் சிறந்தது.
(4) மாதிரிப் பருமனை அதிகரிப்பதன் மூலம் மாத்திரம் ஒரே நேரத்தில் வகை I வழுவையும் வகை II வழுவையும் குறைக்க முடியும்.
(5) $H_1$ பொய்யாக உள்ளபோது அதனை மறுப்பதற்கான நிகழ்தகவு சோதனையின் வலு எனப்படும்.

**36.** 5% பொருண்மை மட்டத்தில் Ho: $\mu_1 = \mu_2$ எதிர் $H_1; \mu_1 \neq \mu_2$ என்ற செவ்வன் குடியினது இடை பற்றிய கருதுகோள் ஆனது கருதுகோளை சோதனை செய்யும் ஒரு ஆய்வாளரால் கணிக்கப்பட்ட சோதனை புள்ளிவிவரப் பெறுமதி 1.35 ஆகும். சோதனையின் P பெறுமதியும் சோதனையின் முடிவும்

(1) P = 0.0885 உம் Ho மறுக்கப்படும்.
(2) P = 0.0885 உம் Ho மறுக்கப்படாது.
(3) P = 0.177 உம் Ho மறுக்கப்படும்.
(4) P = 0.177 உம் Ho மறுக்கப்படாது.
(5) P = 0.5885 உம் Ho மறுக்கப்படாது.

**37.** ஒரு குடியானது $\mu$ ஐ இடையாகவும் மாறற்திறன் 25 ஆகவும் கொண்டு செவ்வனாக பரம்பியுள்ளது. மாதிரிப்பருமன் 9 கொண்ட மாதிரி இடையானது 36.8. Ho : $\mu$ = 37.5 என்ற கருதுகோளை சோதிப்பதற்கான சோதனைப் புள்ளி விபரத்தின் பெறுமதி

(1) -0.084 (2) -0.420 (3) 0.42 (4) -1.260 (5) -1.170

**38.** கைவர்கப் பரம்பல் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

(1) இப்பரம்பல் சமச்சீரானதும் 0 இற்கும் 1 இற்கும் இடையில் ஏதாவது ஒரு பெறுமதி எடுப்பதும் ஆகும்.
(2) வலது ஓராயமானதும் மற்றும் பூச்சியமும் அல்லது பூச்சியத்திற்கு மேற்பட்ட பெறுமதியை எடுப்பதுமானதும் ஆகும்.
(3) எதிர் ஓராயமானதும் மற்றும் எதிர் கணிய பெறுமதிகளை எடுக்கக்கூடியதுமானதும் ஆகும்.
(4) வலது ஓராயமானது மற்றும் -3 இற்கும் +3 இடையிலான பெறுமானத்தை எடுக்கக்கூடியதுமானதும் ஆகும்.
(5) இடை குறித்து சமச்சீர் ஆனதும் இடைக்கு இருபுறமும் -3$\sigma$ இற்கும் +3$\sigma$ இற்கும் இடையில் பரம்பியும் காணப்படுகின்றது.

**39.** நான்கு செவ்வன் பரம்பல்களின் இடைகளை ஒப்பிடுவதற்கு ஒரு மாற்றற்றிறன் பகுப்பாய்வு அட்டவணை கீழே தரப்படுகின்றது.

| மாறலுக்கான மூலங்கள் | வர்க்களின் மொத்தம் | சுயாதீன படி | சராசரி வர்க்கங்களின் மொத்தம் | F பெறுமதி |
|---|---|---|---|---|
| மாதிகளுக்கு இடையில் | 168 | ? | Msc = ? | ? |
| மாதிரிகளுக்கு உள் | ? | ? | Msc = 22 | |
| மொத்தம் | 608 | | | |

பொருத்தமான மாதிரிப்பருமன், சோதனைப்புள்ளிவிவர பெறுமதி, சோதனையின் முடிவு முறையே பின்வருமாறு.

(1) 6, 2.54 Ho மறுக்கப்படாது (2) 6, 2.54 Ho மறுக்கப்படும்
(3) 5, 2.54 Ho மறுக்கப்படாது (4) 5, 1.9 Ho மறுக்கப்படாது.
(5) 5, 1.9 Ho மறுக்கப்படும்

**40.** காலத்தொடர் ஆய்வு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை?

கூற்று A - அரைச்சராசரி முறை நேர் கோட்டு போக்கினை மதிப்பிடுவதற்கு மாத்திரம் பயன்படுத்தப்பட முடியும்.
கூற்று B - இழிவு வர்க்கப் போக்கு கோட்டினை பெறும்போது வழுக்களின் முழுவிலகல்கள் இழிவு படுத்தப்படுகின்றது.
கூற்று C - எதிர்கால போக்கினை மதிப்பிடுவதற்கு அசையும் சராசரி முறையினை பயன்படுத்த முடியாது.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) Aயும் C யும் மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம்

**41.** 2010 ஐ ஆரம்ப ஆண்டாக கொண்டு 2010 - 2016 இடைப்பட்ட காலத்திற்கு அரைச்சராசரி முறையினைப் பயன்படுத்தி போக்கு கோட்டை பெறும்போது முதல் மூன்று வருடங்களிற்கான பெறுமதிகளின் மொத்தம் 450 ஆகவும் கடைசி மூன்று வருடங்களிற்கான பெறுமதிகளின் மொத்தம் 630 ஆகவும் இருப்பின் போக்கு கோட்டின் சமன்பாடானது

(1) $\hat{Y} = 135 + 15X$ (2) $\hat{Y} = 120 + 15X$ (3) $\hat{Y} = 150 + 15X$
(4) $\hat{Y} = 120 + 20X$ (5) $\hat{Y} = 135 + 20X$

**42.** ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் வருடாந்த உற்பத்திக்கான போக்குக்கோடு $\hat{Y} = 480 + 57.6X$ ஆகும். X இனது அலகு 1 வருடம் ஆகும். மாதாந்த போக்குகோடு பெறப்படின் உற்பத்திக்கான மாதாந்த வளர்ச்சி வீதமானது

(1) 0.2 (2) 0.4 (3) 1.2 (4) 2.4 (5) 4.8

**43.** பருவகால மாறல்களை பாதிக்கின்ற காரணிகளில் ஒன்று

(1) வானிலை மாறல்
(2) ஒரு நிறுவனம் தீப்பற்றல்.
(3) கலப்பின மோட்டார் வண்டிகளிற்கான கேள்வி அதிகரித்தல்.
(4) பாடசாலை விடுமுறைக்காலத்தில் பூங்காவிற்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.
(5) ஒரு நாட்டின் தேசிய வருமானம் ஒவ்வொரு ஐந்து வருடமும் கூடுதல் அல்லது குறைதல்.

**44.** பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது?

(1) தரக்கட்டுப்பாட்டில் எழுமாற்று மாறல் சாட்டத்தக்க மாறல் இரண்டும் கட்டுப்படுத்தப்படுகின்றன.
(2) பண்பினை கட்டுப்படுத்துவதற்கு வீச்சு அட்டவணை பயன்படுத்தப்படுகின்றது.
(3) ஒரு கட்டுப்பாட்டு அட்டவணையில் புள்ளிகள் கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருந்தாலும் சாட்டத்தக்க மாறல்கள்இருக்கலாம்.
(4) ஒரு உற்பத்தி செய்முறையில் உள்ள மாறல்கள் ஒரு ஏற்றுக்கொள் மாதிரி எடுப்பு திட்டத்தினை பயன்படுத்தி இனங்காண முடியும்.
(5) ஒரு இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்பட்ட குறிப்பிட்டளவு துணியின் பழுதுகளின் எண்ணிக்கை np அட்டவணை மூலம் கட்டுப்படுத்த முடியும்.

**45.** ஒவ்வொன்றும் 50 பருமன் கொண்ட பத்து மாதிரிகளின் பழுதுகளின் மொத்த எண்ணிக்கை 50 ஆயின் P-அட்டவணையின் மேல்கட்டுப்பாட்டு எல்லை

(1) 0.058 (2) 0.1 (3) 0.142 (4) 0.227 (5) 0.4

**46.** ஒரு ஏற்றுக்கொள் மாதிரி எடுப்புத்திட்டத்தில் 40 அலகுகளை கொண்ட மாதிரிகள் எடுக்கப்படுகின்றது. அது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பதுழுகளை கொண்டிருப்பின் அத்தொகுதி நிராக்கப்படுகின்றது. தொகுதியின் உண்மையான பழுதடைந்த வீதம் 2.5% ஆயின் அத்தொகுதியினை ஏற்றுக்கொள்வதற்கான நிகழ்தகவு

(1) 0.3979 (2) 0.5578 (3) 0.6767 (4) 0.7358 (5) 0.9197

**47.** நடைமுறை ஆண்டில் ஒரு நுகர்வோர் கூடைக்கான மொத்தச் செலவு அடி ஆண்டில் அக்கூடையின் மொத்த செலவின் வீதாசாரமாக கூறப்படும் சுட்டெண்

(1) லாஸ்பியரின் விலைச்சுட்டி (2) லாஸ்பியரின் தொகைச்சுட்டி
(3) பாசேயின் விலைச்சுட்டி (4) பாசேயின் தொகைச்சுட்டி
(5) பெறுமானச் சுட்டி

**48.** பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை உண்மையானது/ உண்மையானவை?

கூற்று A - எளிய பெறுமானச் சார்பு காலபுறமாற்று சோதனையும் காரணிபுறமாற்று சோதனையும் திருப்தி செய்கின்றது.

கூற்று B - நடைமுறை ஆண்டுத் தொகையினதும் அடியாண்டு தொகையினதும் சாராசரியினையும் நிறையாக பயன்படுத்தி பெறப்பட்ட விலைச்சுட்டி மாசல் - எட்வேட் சுட்டி எனப்படும்.

கூற்று D - பிஷரின் சுட்டியானது மேல்நோக்கியதும் கீழ்நோக்கியதுமான கோடல் தன்மையை கொண்டுள்ளது.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) Aயும் B யும் மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம்

**49.** ஒரு குறித்த நிறுவனத்தின் வருமானம் ஆனது 2010 உடன் ஒப்பிடும்போது 2015 ஆண்டில் 50% ஆல் அதிகரிக்கின்றது. உற்பத்தி செய்யப்பட்ட தொகை 20% அதிகரிக்கின்றது. இந்த உற்பத்தியினது அதிகரிப்பு வீதமானது.

(1) 12% (2) 20% (3) 25% (4) 30% (5) 33.3%

**50.** உணவுக்கான சுட்டெண் 150 எனவும் ஏனைய உருப்படிகளுக்கான சுட்டெண் 180 எனவும் கருதுக. முழுதளந்த சுட்டியானது 152 ஆயின் உணவுக்காக ஒதுக்கப்பட்டமொத்த நிறையில் சதவீதம் ஆனது.

(1) 30% (2) 40% (3) 50% (4) 60% (5) 70%

* * *

# (31) வணிகப் புள்ளிவிவரவியல்

## வினாத்தாள் II

**அறிவுறுத்தல்கள் :**

* ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

**1.** (அ) புள்ளிவிவரவியலினை பயன்படுத்தப்படும் மூன்று முக்கியமான சந்தர்ப்பங்களை கூறி அவற்றின் தவறான பயன்பாடுகளையும் கூறுக. (03 புள்ளிகள்)

(ஆ) (i) முதனிலை தரவுகளை சேகரிக்கும்போது பயன்படுத்தப்படுகின்ற சுயகணக்கெடுப்பு முறையுடன் ஒப்பிடும்போது தனிப்பட்ட நேர்முக உரையாடல் முறையினது நன்மை தீமைகளைக் குறிப்பிடுக.

(ii) ஒரு நல்ல வினாக்கொத்தினை தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டியவை எவை?

(07 புள்ளிகள்)

(இ) (i) வியாபார தரவுகளை முன்வைப்பதற்கு வட்ட வரைபினை பயன்படுத்தக் கூடிய இரண்டு நடைமுறை நிலமைகளுக்கான உதாரணங்கள் தருக.

(ii) இரண்டு லோறன்ஸ் வளையிகள் ஒரே ஆள் கூற்றுத்தளத்தில் இடைவெட்டும்போது அவைகளுக்கு இடையிலாக விலகல்களை எவ்வாறு ஒப்பீட்டு ரீதியில் விளக்குவீர்?

(ஈ) ஒரே கைத்தொழில் உள்ள இரண்டு நிறுவனங்களின் தொழிலாளர்களை அவர்களின் உழைப்பு வருமானங்களின் அடிப்படையில் ஐந்து குழுக்களாக கூட்டமாக்கப்பட்டனர். அவர்களுடைய உழைப்பு வருமானங்கள் எவ்வாறு பரம்பியுள்ளன என்பதை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| உழைப்பு வருமானங்கள் (மில்லியன்களில்) | |
|---|---|
| Firm A | Firm B |
| 40 | 80 |
| 60 | 120 |
| 80 | 160 |
| 120 | 200 |
| 200 | 240 |

லோறன்ஸ் வளையியை பயன்படுத்தி இத்தரவுகளை ஒரே ஆள்கூற்றுத் தளத்தில் காட்டுக. இரண்டு பரம்பல்களுக்கிடையிலான விலகல்களை ஒப்பிடுக.

(05 புள்ளிகள்)

**2.** (அ) (i) ஒரு தரவுத்தொடையை பகுப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற கீழே தரப்பட்ட ஒவ்வொரு வகையான அளவீடுகளின் பங்களிப்புக்களை சுருக்கமாக விளக்குக.

- மையநாட்ட அளவைகள்
- விலகல் அளவைகள்

(ii) கூட்டல் இடையானது மைநாட்ட அளவையாக அதிகமாக பயன்படுத்தப்பட்டபோதும் சில சந்தர்ப்பங்களில் அது பலவீனமான அளவீடாக காணப்படுகின்றது. எவ்வாறு இக் கூற்றினை சரிபார்ப்பீர்? (06 புள்ளிகள்)

(ஆ) ஒருமாத காலப்பகுதியில் 200 தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி அலகுகளின் தொகை தொடர்பான தரவுகளைக் கொண்டுள்ள ஒரு மீடிறன் பரம்பலானது கீழே தரப்படுகின்றது.

| அலகுகளின் எண்ணிக்கை | 135 - 140 | 140 - 145 | 145 - 150 | 150 - 155 | 155 - 160 | 160 - 165 | 165 - 170 |
|---|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர்களின் எண்ணிக்கை | 08 | 12 | 40 | 50 | 60 | 25 | 05 |

(i) இப்பரம்பலிற்கான இடை இடையம் ஆகாரம் நியமவிலகல் என்பவற்றைக் காண்க.

(ii) பியேசனின் ஓராயக் குணகத்தைக் கணித்து, இந்த பரம்பலின் வடிவத்தினை தீர்மானிக்க.

(08 புள்ளிகள்)

(இ) ஒரே இயலளவை கொண்ட இரண்டு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மின்குமிழ்களின் இரண்டு மாதிரிகளைப் பயன்படுத்தி பின்வரும் அளவீடுகள் கணிக்கப்பட்டிருக்கின்றன.

| விபரங்கள் | தொழிற்சாலை A | தொழிற்சாலை B |
|---|---|---|
| மின்குமிழ்களின் எண்ணிக்கை | 100 | 120 |
| சராசரி ஆயுட்காலம் (மணித்தியாலங்களில்) | 1100 | 900 |
| நியம விலகல் (மணித்தியாலங்களில்) | 240 | 220 |

(i) எந்த தொழிற்சாலை அதிக உறுதியான வாழ்நாட்களை கொண்ட மின் குமிழ்களை உற்பத்தி செய்கின்றது?

(ii) இரண்டு தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்பட்ட மின்குமிழ்களின் இணைசராசரி வாழ்வுக் காலத்தை கணிக்குக.

(iii) B தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட மின்குமிழின் சராசரி வாழ்வுக்காலம் 1100 h மணித்தியாலங்களாக அதிகரிக்கப்படின் வாழ்வுக் காலத்தின் இணைந்த மாறல் திறனைக் காண்க.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** (அ) சுட்டெண்கள் என்றால் என்ன? (04 புள்ளிகள்)

(ஆ) A, B, C, D என்ற நான்கு பண்டங்களின் 2010, 2016 ஆண்டுகளுக்கான விலை, தொகை என்பன பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| பண்டம் | 2010 | | 2016 | |
|---|---|---|---|---|
| | விலை (ரூபா) | தொகை (அலகுகளில்) | விலை (ரூபா) | தொகை (அலகுகளில்) |
| A | 40 | 10 | 60 | 15 |
| B | 50 | 12 | 65 | 10 |
| C | 45 | 10 | 75 | 12 |
| D | 60 | 20 | 100 | 25 |

2010 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆண்டிற்கான பின்வரும் விலைச்சுட்டிகளைக் கணிக்க.

(i) லாஸ்பெயர் விலைச்சுட்டி

(ii) பாசே விலைச்சுட்டி

(iii) மாசல் - எட்ஸ்வேத் இன் விலைச்சுட்டி

(iv) பிசரின் இலட்சிய விலைச்சுட்டியைக் கணிக்க. (06 புள்ளிகள்)

(இ) ஒரு காலத் தொடரின் பருவ காலத் தாக்கத்தினை இல்லாமல் செய்தல் என்பதனால் விளங்குவது யாது? இதனது முக்கியத்துவத்தை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஈ) பின்வரும் அட்டவணையானது 2010 இல் இருந்து 2016 வரையான காலத்திற்கு ஒரு நிறுவனத்தின் வருடாந்த உற்பத்தியை தருகின்றது.

| வருடம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தியின் அளவு (அலகுகளில்) | 65 | 80 | 95 | 85 | 110 | 105 |

(i) இழிவு வர்க்க முறையினைப் பயன்படுத்தி போக்குக் கோட்டினை மதிப்பிடுக.

(ii) 2014 ஆண்டின் முதலாவது காலாண்டினை ஆரம்ப காலமாக கருதி காலாண்டு போக்குக் கோட்டினைப் பெற்று 2015 ஆண்டின் மூன்றாவது காலாண்டின் உற்பத்தியினை மதிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4.** (அ) கீழே தரப்பட்ட குணகங்களை விளக்குக. அவைகளுக்கிடையிலான தொடர்பினை விளக்குக.

(i) இணைப்புக் குணகம்
(ii) பிற்செலவுக் குணகம்
(iii) துணிபுக் குணகம்

(ஆ) ஒரு கம்பனியின் ஒரு குறித்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் ஒவ்வொரு மாதத்தின் தேறிய இலாபமும் விளம்பரச் செலவும் கீழே தரப்பட்டுள்ளது.

| மாதம் | Jan | Feb | March | April | May | June |
|---|---|---|---|---|---|---|
| விளம்பரச் செலவு (மில்லியன்) | 4 | 6 | 10 | 8 | 20 | 12 |
| தேறிய இலாபம் (மில்லியன்) | 40 | 50 | 70 | 60 | 80 | 60 |

$\Sigma X = 60$ $\Sigma Y = 360$ $\Sigma XY = 3960$ $\Sigma X^2 = 760$ $\Sigma Y^2 = 22600$

(i) இழிவு வர்க்க முறையினை பயன்படுத்தி விளம்பரச் செலவின் மீதான தேறிய இலாபத்தின் பிற்செலவு கோட்டினை மதிப்பிடுக.

(ii) கம்பனியானது யூலை மாதத்தில் தேறிய இலாபத்தினை 95 மில்லியனாக கூட்டவேண்டிய தேவை இருப்பின் விளம்பரத்துக்காக செலவு செய்யப்பட வேண்டிய விளம்பரச் செலவின் அளவு யாது?

(iii) துணிபுக்குணகத்தை கணித்து இணைபுக் குணகத்தைப் பெறுக. இரு குணகங்களையும் விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சோடிப் பதங்களை வேறுபடுத்துக.

(i) எழுமாற்று மாறலும் சாட்டத்தக்க மாறலும்.
(ii) செய்முறைக் கட்டுப்பாடும் உற்பத்திக் கட்டுப்பாடும்.
(iii) மாறிகளுக்கான கட்டுப்பாட்டு அட்டவணையும் பண்புகளிற்கான கட்டுப்பாட்டு அட்டவணையும்.
(iv) நுகர்வோர் இடரும் உற்பத்தியாளர் இடரும்.

(ஈ) 50 பருமனைக் கொண்ட பத்து (10) மாதிரிகள் ஒவ்வொன்றிலும் கண்டு படிக்கப்பட்ட பழுதுகளின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| மாதிரிகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பழுதுகளின் எண்ணிக்கை | 3 | 2 | 4 | 0 | 1 | 5 | 6 | 4 | 2 | 3 |

ஒவ்வொரு மாதிரியிலும் உள்ள பழுதுகளின் எண்ணிக்கையை பிரதிபலிக்கின்ற பொருத்தமான கட்டுப்பாட்டு அட்டவணையை அமைக்குக. செய்முறை கட்டுப்பாட்டிற்குள் உள்ளதா எனச் சோதிக்க.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

**5.** (அ) வியாபாரத்துறையில் நிகழ்தகவு என்ற எண்ணக்கரு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என விளக்குக. (3 புள்ளிகள்)

(ஆ) 11 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கம்பனியின் இயக்குனர் குழுவில் 7 பேர் ஆண்கள், 4 பேர் பெண்கள் ஆகும். ஒரு குழுவிற்கு 3 இயக்குனர்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டால் அக்குழு ஆகக்குறைந்த இரு ஆண்களை கொண்டிருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

(4 புள்ளிகள்)

(இ) ஒரு வியாபார நிறுவனத்தின் வேலையாட்கள் பால், கூலி, கல்வித்தகைமைகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றனர்.

| பால் | மாதாந்த சம்பளம் 50,000 இற்கு குறைவானது | | மாதாந்த சம்பளம் 50,000 உம் அதற்கு மேலும் | |
|---|---|---|---|---|
| | பட்டம் பெறாதோர் | பட்டம் பெற்றோர் | பட்டம் பெறாதோர் | பட்டம் பெற்றோர் |
| பெண் | 15 | 10 | 20 | 30 |
| ஆண் | 25 | 20 | 30 | 50 |

ஒரு வேலையாள் எழுமாறாக தெரிவு செய்யப்படின், தெரிவு செய்யப்பட்டவர்

(i) அவர் ஆணாக இருப்பதற்கான நிகழ்தகவு

(ii) பெண் பட்டதாரியாக இருப்பதற்கான நிகழ்தகவு

(iii) தெரிவுசெய்யப்பட்ட வேலையாள் பெண்ணாக இருப்பின் அவர் ரூ. 50,000 அல்லது அதற்கு மேல் மாதாந்த சம்பளம் பெறுவனதற்கான நிகழ்தகவு

(iv) தெரிவு செய்யப்படுபவர் ரூ. 50,000 குறைவாக மாதாந்த சம்பளத்தை பெறுபவராயின் அவர் ஆணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(v) தெரிவுசெய்யப்பட்டவர் ரூ. 50,000 அல்லது அதற்கு மேல் பெறுபவராகவும் அவர் ஆண் பட்டதாரியாகவும் இருப்பதற்கான நிகழ்தகவு

(vi) தெரிவு செய்யப்பட்ட நபர் ஆணாக இருப்பதும், 50,000 ரூபாய்க்கு குறைவான வருமானம் பெறுபவராக இருப்பதும் புள்ளிவிபர ரீதியாக சாரா நிகழ்ச்சிகளா?

(8 புள்ளிகள்)

(d) ஒரு கைத்தொழில் கம்பனியின் மொத்த உற்பத்தியில் 60% இயந்திரம் A யினாலும் 40% இயந்திரம் B யினாலும் உற்பத்தி செய்யப்படுகின்றது. A இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்பட்டவற்றில் 5% உம் B இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்பட்டவற்றில் 8% உம் பழுதடைந்தவையாக கண்டுபிடிக்கப்பட்டன. மொத்த உற்பத்தியில் இருந்து எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட ஒரு அலகு பழுதடையாத அலகாக இருப்பின் அது இயந்திரம் A இனால் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதற்கான நிகழ்தகவு

(5 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (அ) ஓர் ஈருறுப்பு பரம்பலை உருவாக்கின்ற எழுமாற்றுப் பரிசோதனையின் பண்புகளை விளக்குக. ஈருறுப்பு பரம்பலின் பரமானங்களைக் குறிப்பிட்டு நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்ற சில உதாரணங்களைத் தருக. (4 புள்ளிகள்)

(ஆ) A, B என்ற இரு குழுக்களிற்கிடையில் ஒரு தொடர்போட்டி 5 சுற்றுகளில் நிகழ்த்தப்பட்டது. அந்தப் போட்டியில் ஏதாவது ஒரு சுற்றில் A என்ற குழு வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவு 60%. குழு A ஆனது,

(i) ஒரு சுற்றிலேனும் வெற்றி பெறாது இருத்தல்.
(ii) எல்லா சுற்றுகளிலும் வெற்றி பெறுதல்.
(iii) அப்போட்டித் தொடரில் வெற்றி பெறுதல்.

என்பதற்கான நிகழ்தகவினைக் காண்க. (5 புள்ளிகள்)

(இ) (i) ஈருறுப்பு பரம்பலிற்கான செவ்வன் பரம்பல் அண்ணளவாக்கத்திற்கு பூர்த்தி செய்யப்படவேண்டிய நிபந்தனைளைக் கூறுக.

(ii) ஒரு நிறுவனத்தால் விற்கப்பட்ட வாகனங்களில் 25% மானவை வெள்ளை நிறமானவை. 48 வாகனங்களை கொண்ட ஒரு தொகுதியில் 10 க்கு மேற்பட்ட வாகனங்கள் வெள்ளை நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவினை காண்க.

(5 புள்ளிகள்)

(ஈ) ஒரு தேர்விற்கு தோற்றிய பரீட்சார்த்திகளில் 12% மானோர் 25 புள்ளிகளிலும் பார்க்க குறைவான புள்ளிகளைப் பெற்றனர். அதேவேளை 8% மானோர் 75 இலும் அதிகமான புள்ளிகளைப் பெற்றனர். இத்தேர்வினது புள்ளிகள் செவ்வனாக பரம்பி இருக்கிறது என கருதி இப்பரம்பலுக்கான இடை மாறற்றிறன் என்பவற்றைக் காண்க.

சித்திப்புள்ளி 40 ஆயின் சித்தியடையாதோர் சதவீதத்தைக் காண்க. (6 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**7.** (அ) (i) பூரண கணக்கெடுப்புடன் ஒப்பிடும்போது மாதிரிக்கள ஆய்வினை பயன்படுத்துவதால் ஏற்படும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் தருக.

(ii) ஒரு மாதிரிக்கள ஆய்வினை திட்டமிடுவதில் உள்ள படிமுறைகளை விளக்குக. (4 புள்ளிகள்)

(ஆ) படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பு முறையினை விளக்கி அதன் நன்மை தீமைகளை கூறுக.

(4 புள்ளிகள்)

(இ) (i) ஒரு குடியின் பண்பு Y ஆனது $\{1, 3, 5\}$ பெறுமானங்களை கொண்டிருக்கின்றது. குடிப்பருமன் 3 எனின் குடியிடையையும் குடிமாறல் திறனையும் கணிக்குக.

(ii) பிரதி வைப்பின்றி மாதிரி பருமன் 2 ஐக் கொண்ட எல்லா சாத்தியமான மாதிரிகளையும் எழுதுக. மாதிரி இடைகளின் மாதிரி எடுப்பு பரம்பலை அமைக்குக.
இதில் இருந்து மாதிரி இடையானது குடியிடையினது கோடலற்ற மதிப்பான் என நிறுவுக.

(iii) மாதிரி எடுப்பு பரம்பலினை பயன்படுத்தி மாதிரி இடைக்கான மாறற்றிறனை கணித்து, அதனை ஒரு தனி மாதிரியின் உதவியுடன் சூத்திரத்தின் மூலம் மதிப்பிட முடியும் எனக்காட்டுக.

(8 புள்ளிகள்)

(ஈ) மைய எல்லை தோற்றத்தினை கூறுக. 4.5 இடையையும் 4 மாற்றறிறனையும் கொண்ட குடியிலிருந்து 54 பருமன் கொண்ட மாதிரி எடுக்கப்படுகின்றது எனின் மாதிரி இடை 5 ஐ விட பெரிதாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

(4 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**8.** (அ) ஒரு நம்பிக்கை ஆயிடையினது அகலத்தினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (3 புள்ளிகள்)

(ஆ) பால் பைக்கற்றுக்கள் ஒரு இயந்திரத்தினால் நிரப்பப்படுகின்றன. இந்த இயந்திரத்தினால் நிரப்பப்பட்ட பைக்கற்றுகளில் 25 பைக்கற்றுக்கள் கொண்ட ஒரு மாதிரி எழுமாறாக எடுக்கப்பட்டது. அந்த பைக்கற்றுக்களில் நிறையின் மொத்தம் 750g ஆகவும், அவ் நிறைகளின் வர்க்கத்தின் மொத்தம் 23364g எனவும் கணிக்கப்பட்டன. இயந்திரத்தினால் நிரப்பப்பட்ட பால் பைக்கற்றின் நிறை செவ்வனாக பரம்பியுள்ளது எனக் கருதி இந்த இயந்திரத்தினால் நிரப்பப்பட்ட பால் பைக்கற்றினது சராசரி நிறைக்கான 95% நம்பிக்கை ஆயிடையை அமைக்குக.

(5 புள்ளிகள்)

(இ) 100 ஆண்களைக் கொண்ட மாதிரியில் 50 ஆண்களும் 100 பெண்களைக் கொண்ட மாதிரியில் 60 பெண்களும் ஒரு குறிப்பிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி தொடர்பான அவர்களது விருப்பத்தெரிவினை வெளிப்படுத்தினர். இந்நிகழ்ச்சியினை பெண்கள் ஆண்களிலும் பார்க்க கூடுதலாக விரும்புகின்றார்களா என்பதனை 5% பொருண்மை மட்டத்தில் சோதனை செய்க.

P பெறுமதியை கணிக்குக.

(6 புள்ளிகள்)

(ஈ) ஒரு மாதத்தில் மூன்று வேறுபட்ட பிரதேசங்களில் விற்பனை செய்யப்பட்ட மூன்று வகையான பண்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| பண்டங்களின் வகை | பிரதேசம் | | |
|---|---|---|---|
| | 1 | 2 | 3 |
| A | 40 | 30 | 30 |
| B | 25 | 35 | 40 |
| C | 10 | 40 | 50 |

பண்டங்களின் வகைக்கான விற்பனை பிரதேச வேறுபாடுகளில் தங்கி இருக்கிறதா என்பதை 5% பொருண்மை மட்டத்தில் சோதனை செய்க.

(6 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

# (32) வணிகக் கல்வி

## வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் I -** **நேரம் : 2 மணித்தியாலங்கள்**

இது பல்தேர்வு வினாக்கள் 30 இனையும் சுருக்கமாக விடையளிக்கும் வினாக்கள் 20 இனையும் உள்ளடக்கியது. **எல்லா வினாக்களுக்கும்** விடையளிக்க வேண்டும். ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் **மொத்தப் புள்ளிகள் 100** ஆகும்.

**வினாத்தாள் II -** **நேரம் 3 மணித்தியாலங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்களாகும்.)

இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளை உள்ளடக்கியது.

பகுதி I - கட்டமைக்கப்பட்ட **கட்டுரை வகை** வினாக்கள் **நான்காகும்.**

பகுதி II - கட்டமைக்கப்பட்ட **கட்டுரை வகை** வினாக்கள் **நான்காகும்.**

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது **இரு** வினாக்களையேனும் தெரிவுசெய்து **ஐந்து** வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு 20 புள்ளிகள் வீதம் **மொத்தப் புள்ளிகள் 100** ஆகும்.

இறுதிப் புள்ளிகளைக் கணித்தல் :

வினாத்தாள் I = 100

வினாத்தாள் II = 100

இறுதிப் புள்ளி = 200 ÷ 2 = 100

### வினாத்தாள் I

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

---

* 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வினாவிற்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** பின்வரும் உதாரணங்களுள் தேவைகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.
   (1) கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம், தொலைபேசி, தொடர்பாடல்
   (2) கல்வி, போக்குவரத்து, வைத்தியசாலை, தொடர்பாடல், பாதுகாப்பு
   (3) பொழுதுபோக்கு, போக்குவரத்து, காப்புறுதி, கல்வி, தொடர்பாடல்
   (4) மின்சாரம், கல்வி , சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து
   (5) பொழுதுபோக்கு, கல்வி, போக்குவரத்து, சுகாதாரம், தொடர்பாடல் (............)

**2.** வாசன் என்பவர் இரத்தினக்கல் அகழ்வு மற்றும் இரத்தினக் கற்களைப் பட்டை தீட்டி ஆபரணங்களைத் தயாரிக்கும் வணிகமொன்றை நடாத்திச் செல்கின்றார். இங்கு காணப்படும் வணிகங்களுக்கிடையிலான தொடர்பாவது,
   (1) கைத்தொழில் உற்பத்தியும் சேவை உற்பத்தியுமாகும்.
   (2) விவசாய உற்பத்தியும் கைத்தொழில் உற்பத்தியுமாகும்.
   (3) முதனிலை உற்பத்தியும் மூன்றாம்நிலை உற்பத்தியுமாகும்.
   (4) இரண்டாம்நிலை உற்பத்தியும் மூன்றாம்நிலை உற்பத்தியுமாகும்.
   (5) முதனிலை உற்பத்தியும் இரண்டாம்நிலை உற்பத்தியுமாகும். (............)

**3.** கீழே சில நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன.

A - அமாயா, தனது வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தி செய்யும் காய்கறிகளை நாளாந்தப் பாவனைக்குப் பயன்படுத்துகின்றார்.

B - நிமால், தனது மோட்டார் வாகனத்தை நண்பனான மாதவனுக்கு விற்பனை செய்தார்.

C - விசாலினி, கழிவாக நீக்கப்படுகின்ற துணித் துண்டுகளைப் பயன்படுத்தி கால் துடைப்பங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றார்.

D - பிரதீப், இறக்குமதி செய்யப்பட்ட உலர் உணவுப் பொருட்களை மீண்டும் பொதிசெய்து சுட்டுத்துண்டுகளை (Label) ஒட்டி மானிய விலையில் விற்பனை செய்கின்றார்.

மேலேயுள்ள நிகழ்வுகளில் வணிகத்தின் குணாதிசயங்களை வெளிக்காட்டும் நிகழ்வுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவுசெய்க.

(1) A யும் B யும்
(2) A யும் C யும்
(3) B யும் C யும்
(4) B யும் D யும்
(5) C யும் D யும் (.............)

**4.** வணிகங்களின் சமூகப் பொறுப்புக்கள் மற்றும் ஒழுக்கங்களுக்கான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - ஊழியர்களுக்கு தொழில் சார்ந்த பாதுகாப்பினை வழங்குதல்

B - உடைமையாளர்களுக்கு நியாயமான இலாபத்தை வழங்குதல்

C - நுகர்வோருக்கு உண்மையான விடயங்களை மாத்திரம் தொடர்பாடல் செய்தல்

D - ஏனைய தரப்பினருக்குப் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு கருமமாற்றுதல்

E - ஏனைய வணிகங்களுடன் நியாயமாகவும் நேர்மையாகவும் போட்டியிடுதல்

மேலே தரப்பட்டவற்றுள் வணிக ஒழுக்கங்களுக்கான உதாரணங்களாவன,

(1) A, B, C ஆகியன
(2) A, C, D ஆகியன
(3) B, C, D ஆகியன
(4) B, D, E ஆகியன
(5) C, D, E ஆகியன (.............)

**5.** பேரினச் சூழல் காரணிகள் சில **X** நிரலிலும், அவற்றுடன் தொடர்புடைய உதாரணங்கள் சில **Y** நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) பொருளாதாரச் சூழல் | A - இணைய வலையமைப்பினூடாக வழங்கப்படுகின்ற சேவைகள் பாரியளவில் விருத்தியடைதல் |
| (ii) மக்கட் சூழல் | B - உலகிலுள்ள நாடுகள் பொதுவாக நிலைபேறான (Sustainable) அபிவிருத்தியில் ஈடுபடல் |
| (iii) தொழில்நுட்பச் சூழல் | C - 60 வயதுக்கு மேற்பட்டோரின் சனத்தொகை வீதமானது மிகக்கூடிய மட்டத்தில் காணப்படல் |
| (iv) சமூக, கலாசாரச் சூழல் | D - கடந்த மூன்று மாதங்களில், பொருட்கள் மற்றும் சேவைகளின் சராசரி விலை மட்டமானது தொடர்ச்சியாக அதிகரித்தல் |
| (v) பூகோளச் சூழல் | E - தமிழ், சிங்களப் புத்தாண்டினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதில் ஆர்வம் காட்டுதல் |

**X** நிரலில் தரப்பட்டுள்ள பேரினச் சூழல் காரணிகளின் வரிசைப்படி **Y** நிரலிலுள்ள உதாரணங்களை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, C, D, E, B
(2) B, C, A, E, D
(3) D, C, A, B, E
(4) D, C, A, E, B
(5) D, C, B, E, A

(.............)

**6.** அரசாங்கத்தின் வரி வருமான வகைகளும் அவற்றிற்கான உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| **வரி வகைகள்** | | **உதாரணங்கள்** |
|---|---|---|
| A - வருமான வரி | - | கம்பனி வரி, உழைக்கும் போது செலுத்தும் வரி |
| B - உற்பத்தி வரி | - | புகையிலை உற்பத்தி வரி, கலால் வரி |
| C - பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | - | தொலைத்தொடர்புகள் வரி, மொத்த, சில்லறை வியாபாரத்தின் அடிப்படையில் அறவிடப்படும் வரி |
| D - இறக்குமதி அடிப்படையிலான வரி | - | இறக்குமதியின் மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி |

வரி வகைகளும் அதற்குரிய உதாரணங்களும் சரியாகக் காட்டப்பட்டுள்ளது,

(1) A, B ஆகியவற்றிலாகும். (2) A, C ஆகியவற்றிலாகும்.
(3) B, C ஆகியவற்றிலாகும். (4) C, D ஆகியவற்றிலாகும்.
(5) C, E ஆகியவற்றிலாகும். (.............)

**7.** சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகர்களுக்காக நடாத்தப்பட்ட செயலமர்வில் அவ்வணிகங்களுக்கான நிதி வசதிகளை வழங்குவதற்கு தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடன் முன்மொழிவுத் திட்டங்கள் மூன்றும், அக்கடன் முன்மொழிவுகளுக்கு நிதி அனுசரணை வழங்கும் நிறுவனங்கள் மூன்றும் தொடர்பில் விரிவுரையாளரொருவர் சில விடயங்களை வெளிப்படுத்தினார்.

| **கடன் முன்மொழிவுத் திட்டம்** | **அனுசரணை வழங்கும் நிறுவனம்** |
|---|---|
| (i) சஹன்யா | A - சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி |
| (ii) சுவன | B - ஆசிய அபிவிருத்தி வங்கி |
| (iii) சனச கடன் திட்டம் | C - தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் |

இக்கடன் முன்மொழிவுத் திட்டங்களுக்கு நிதி அனுசரணை வழங்குகின்ற நிறுவனங்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) C, A, B (3) B, C, A (4) B, A, C (5) C, B, A (.............)

**8.** வணிக அமைப்பு வகையினையும் அதன் குணாதிசயங்களையும் சரியாகக் காட்டும் கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையற்ற, இலாபம் உழைத்தலை நோக்கமாகக் கொள்ளாத வணிக அமைப்பு வகை கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாகும்.
(2) பொதுத் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையற்ற, இலாபம் உழைத்தலை நோக்கமாகக் கொண்ட வணிக அமைப்பு வகை அரச கூட்டுத்தாபனங்களாகும்.
(3) தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையற்ற, தனியொருவரால் ஆரம்பிக்க முடியாத வணிக அமைப்பு வகை பங்குடைமை வணிகங்களாகும்.
(4) பொதுத் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுடைய, ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை பத்தினைக் கொண்டிருக்க வேண்டிய வணிக அமைப்பு வகை கூட்டுறவு வணிகங்களாகும்.
(5) பொதுத் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையுடைய, இலாப நோக்கமற்ற வணிக அமைப்பு வகை அரச திணைக்களங்களாகும். (.............)

**9.** நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவுசெய்க.

(1) இலங்கை தரக் கட்டளைகள் பணியகம், கைத்தொழில் அபிவிருத்தி சபை, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
(2) உள்நாட்டு இறைவரித் திணைக்களம், நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பிலான அதிகாரசபை, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை தரக் கட்டளைகள் பணியகம்
(3) அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பிலான அதிகாரசபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
(4) இலங்கை தரக் கட்டளைகள் பணியகம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை
(5) மத்திய சூழல் அதிகாரசபை, இலங்கை தரக்கட்டளைகள் பணியகம், அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம், தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (.............)

**10.** தனது நண்பருக்கு வழங்கியிருந்த கடனின் ஒரு பகுதி அமுதனுக்கு மீளக் கிடைக்கப்பெற்றது. அத்தொகையில் அவர் ரூ. 80,000 பெறுமதியான கணினியொன்றைக் கொள்வனவு செய்ததுடன் எஞ்சிய தொகையினை வங்கியில் வைப்புச் செய்தார். இந்நிகழ்விற்கேற்ப பணத்தினால் நிறைவேற்றப்பட்ட கருமங்களை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை எது?

(1) பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், கணக்கீட்டு அலகு, பரிமாற்று ஊடகம், பெறுமானத் திரட்டு

(2) கணக்கீட்டு அலகு, பரிமாற்று ஊடகம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், பெறுமானத் திரட்டு


(3) பெறுமானத் திரட்டு, பரிமாற்று ஊடகம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், கணக்கீட்டு அலகு

(4) பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம், பெறுமானத் திரட்டு, கணக்கீட்டு அலகு, பரிமாற்று ஊடகம்

(5) பெறுமானத் திரட்டு, கணக்கீட்டு அலகு, பரிமாற்று ஊடகம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம்

(.............)

**11.** நிமலன் என்பவர் மக்கள் வங்கியின் குருநாகல் கிளையில் நடைமுறைக் கணக்கைப் பேணும் அதேவேளை கேசவன் என்பவர் இலங்கை வங்கியின் கண்டிக் கிளையில் நடைமுறைக் கணக்கைப் பேணுகின்றார். நிமலன் ரூ. 60,000 பெறுமதியான குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையொன்றை கேசவனுக்கு வழங்கினார். கேசவன் அக்காசோலையினை தனது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதற்குச் சமர்ப்பித்தபோது வங்கியானது குறுக்குக் கோடிட்டமை காரணமாக அக்காசோலையை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டு, அக்காசோலையை நிராகரித்தது. அக்காசோலை குறுக்குக் கோடிடப்பட்டிருந்த முறையினைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.




(1) (2) (3) (4) (5) (.............)

**12.** சிந்து தனக்குச் சொந்தமான 50 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டினைக் காப்புறுதி செய்துள்ளார். கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினால் அவரின் வீடு சேதமடைந்ததுடன் அதற்கான காப்புறுதி இழப்பீட்டினை அவர் கோரிய போது காப்புறுதி நிறுவனம் அதனை நிராகரித்தது. அவ்வாறு நிராகரிப்பதற்குரிய காப்புறுதித் தத்துவமாக அமைவது,

(1) உச்ச நம்பிக்கையாகும்.
(2) காப்புறுதி செய்யும் உரிமையாகும்.
(3) இழப்பீட்டுத் தத்துவமாகும்.
(4) அண்மிய காரணியாகும்.
(5) பதிலாள் வைப்புத் தத்துவமாகும். (.............)

**13.** இலத்திரனியல் ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்ற பொருள் விற்பனையின் பிரதிகூலமாகக் குறிப்பிடக்கூடியது,

(1) விலை அதிகமாகக் காணப்படலாகும்.

(2) மோசடிகள் இடம்பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் கூடுதலாகக் காணப்படலாகும்.

(3) பௌதீகரீதியில் பரிசோதித்துப் பார்க்க முடியாமையாகும்.

(4) மீள ஒப்படைப்பது சிரமமானதாகக் காணப்படலாகும்.

(5) முன்கூட்டியே பணத்தைச் செலுத்த வேண்டியேற்படலாகும். (.............)

**14.** வெளிநாட்டு வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களில் சில **X** நிரலிலும் அவை தேவைப்படுவதற்கான காரணங்கள் **Y** நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) இறக்குமதிக் குறிப்பு | A - ஏற்றுமதியாளரிடமிருந்து பொருட்களைக் கட்டளையிடுவதற்கு இறக்குமதியாளருக்குத் தேவையானது |
| (ii) கப்பல் தளச்சீட்டு | B - குற்றமுள்ள சுமைச்சீட்டிற்குப் பதிலாக தூய சுமைச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றுமதியாளருக்குத் தேவையானது |
| (iii) நட்டஈட்டுக் கடிதம் | C - இறக்குமதியாளர் சார்பில் துறைமுகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள பொருட்களின் உரிமையினை வெளிப்படுத்துவதற்கு இறக்குமதியாளருக்குத் தேவையானது |
| (iv) தரவாணை (Indent) | D - சுங்கத்திற்குப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுமதியாளருக்குத் தேவையானது |

**X** நிரலில் தரப்பட்டுள்ள ஆவணங்களுக்கேற்ப **Y** நிரலில் தரப்பட்டுள்ள அவை தேவைப்படுவதற்கான காரணங்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) B, C, D, A (2) C, D, A, B (3) C, D, B, A (4) D, A, B, C (5) D, B, C, A

(.............)

**15.** முதல்வரின் சார்பாக பொருட்களைக் கடனுக்கு விற்பனை செய்து அக்கடன் தொகையினை மீளப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை ஏற்பவர்

(1) பொறுப்பு முகவர்
(2) காரணிகர்
(3) ஏல விற்பனையாளர்
(4) தரகு முகவர்
(5) தரகர்

(.............)

**16.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலில் முகாமைத்துவ மட்டங்களும் **Y** நிரலில் முகாமைத்துவப் பதவிப் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A - உயர்மட்ட முகாமையாளர் | 1 - மேற்பார்வையாளர் |
| | 2 - நிதி முகாமையாளர் |
| B - நடுத்தரமட்ட முகாமையாளர் | 3 - மனித வள முகாமையாளர் |
| | 4 - முகாரி (Foreman) |
| C - முன்வரிசை முகாமையாளர் | 5 - பிரதான நிறைவேற்று அதிகாரி |
| | 6 - பொது முகாமையாளர் |

முகாமைத்துவ மட்டங்களையும் அவற்றிற்குரிய முகாமைத்துவ பதவிப் பெயர்களையும் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A - 1 , 4 B - 2 , 3 C - 5 , 6
(2) A - 5 , 6 B - 2 , 3 C - 1 , 4
(3) A - 4 , 6 B - 2 , 5 C- 1 , 3
(4) A - 5 , 6 B - 3 , 4 C - 1 , 2
(5) A - 3 , 5 B - 2 , 6 C - 1 , 4

(.............)

**17.** எண்ணக்கருவாக்கத் திறன் தொடர்பில் மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) புதிய கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்தல், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஏனையவர்களுடன் ஒத்துழைப்புடன் இணைந்து செயற்படுவதற்குமான ஆற்றல், மதிநுட்பத்துடன் சிந்திப்பதற்கான ஆற்றல் ஆகியனவாகும்.

(2) உள்ளக, வெளியகச் சூழல் தொடர்பிலான விளக்கமும் பிரச்சினைகளை விளங்கிக்கொள்வதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்குமுள்ள ஆற்றலாகும்.

(3) அமைப்பொன்றின் சூழல் தொடர்பான விளக்கம், பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளல் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான ஆற்றல், தூரநோக்கிலும் மதிநுட்பத்துடனும் சிந்திக்கும் ஆற்றல் ஆகியனவாகும்.

(4) அமைப்பின் சூழல் தொடர்பிலான விளக்கம், பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளலும் அதனைத் தீர்ப்பதற்கான ஆற்றலும், தூர நோக்கச் சிந்தனை, கருமங்களை மேற்கொள்வதற்கான ஆற்றல் ஆகியனவாகும்.

(5) பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கும் தீர்ப்பதற்குமுள்ள ஆற்றல், ஊழியர் ஒத்துழைப்பு மற்றும் ஏதாவதொரு கருமத்தைச் செய்வதற்குக் காணப்பட வேண்டிய விசேட அறிவு, அனுபவம் மற்றும் ஆற்றல் ஆகியனவாகும்.

(.............)

**18.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலில் உற்பத்தி முறைகளும் **Y** நிரலில் அவ்வுற்பத்தி முறைகளுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A - வேலை<br>B - தொகுதி<br>C - பாய்ச்சல் | 1 - மணமகளின் அளவிற்கேற்ப திருமண ஆடையொன்றைத் தைத்தல்<br>2 - ஆயுதப்படையினருக்கு சீருடைகளைத் தைத்தல்<br>3 - கட்டளைக்கேற்ப வீட்டு திட்டவரைபடமொன்றை வரைதல்<br>4 - பாடசாலையொன்றின் மாணவ தலைவர்களுக்கான பதக்கங்களைத் தயாரித்தல்<br>5 - பழப்பாகு (Jam) உற்பத்தி நிறுவனமொன்று சீனி சேர்க்கப்படாத பழப்பாகு வகையொன்றைச் சந்தைக்கு வழங்குவதற்காக உற்பத்தி செய்தல்<br>6 - சொக்லட் உற்பத்தி நிறுவனமொன்று ஏற்றுமதிக்காக சொக்லட்டுகளை உற்பத்தி செய்தல் |

உற்பத்தி முறைகளையும் அவற்றுக்குரிய உதாரணங்களையும் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) A - 1 , 2  B - 3 , 4  C - 5 , 6
(2) A - 1 , 3  B - 2 , 4  C - 5 , 6
(3) A - 1 , 4  B - 3 , 5  C - 2, 6
(4) A - 3 , 4  B - 5 , 6  C - 1, 2
(5) A - 5 , 6  B - 1 , 2  C - 3, 4  (.............)

**19.** உற்பத்தி நிறுவனமொன்றின் குறித்த உற்பத்திப்பொருளொன்றுடன் தொடர்புடைய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அலகொன்றிற்கான நிலையான கிரயம் - ரூ. 50
மொத்த மாறும் கிரயம் - ரூ. 100 000
எதிர்பார்க்கும் உற்பத்தி அலகுகள் - 1 000

இவ்வுற்பத்தி நிறுவனமானது உற்பத்திக் கிரயத்திற்கு ரூ. 50 இலாபத்தைச் சேர்த்து விலையினை நிர்ணயிக்க எதிர்பார்க்கின்றது. இங்கு சமப்பாட்டுப் புள்ளிக்குரிய உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை

(1) 100 ஆகும்.  (2) 200 ஆகும்.
(3) 500 ஆகும்.  (4) 1 000 ஆகும்.
(5) 2 000 ஆகும்.  (.............)

**20.** சந்தைப்படுத்தல் தத்துவத்தின் பரவல் பற்றிய எண்ணக்கரு தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பொருட்கள் சேவைகளின் தரம் தொடர்பில் கவனம் செலுத்தாது உற்பத்தி இயலளவினை அதிகரிப்பது தொடர்பில் மாத்திரம் ஆர்வம் காட்டுதல் உற்பத்தி எண்ணக்கருவாகும்.
(2) உயர் தரத்துடன் கூடிய பொருட்களை உற்பத்தி செய்து நியாயமான விலைக்குச் சந்தைக்கு வழங்குவதன் மூலம் மாத்திரம் அவற்றிற்கான கேள்வி உருவாதல் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகும்.
(3) நுகர்வோரின் தேவை, விருப்பங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி பல்வேறு விற்பனை மேம்படுத்தல் முறைகளைப் பின்பற்றி கேள்வியினை அதிகரித்துக் கொள்ள முடியுமானதாகவிருத்தல் உற்பத்தி எண்ணக்கருவாகும்.
(4) சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தல் விற்பனை எண்ணக்கருவாகும்.
(5) குறுங்கால சந்தைப்படுத்தல் உபாயங்களைப் பயன்படுத்தி குறுங்காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியொன்றை வழங்குதல் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகும்.

(.............)

**21.** முழுமைப்படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் (Holistic Marketing Concept) பிரதான பிரிவுகள் **X** நிரலிலும் அப்பிரிவுகளின் மூலம் கவனம் செலுத்தப்படுகின்ற கூறுகள் **Y** நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) தொடர்புடைமைச் சந்தைப்படுத்தல் | A - நிறுவனங்களிலுள்ள சகல ஊழியர்களும் |
| (ii) ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் | B - சமூகமும் சூழலும் |
| (iii) அகச் சந்தைப்படுத்தல் | C - அக்கறையுடைய தரப்பினர் |
| (iv) செயற்றிறன் சந்தைப்படுத்தல் | D - சந்தைப்படுத்தல் கலவை |

**X** நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களுக்கமைய **Y** நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கூறுகளை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A , B, C, D
(2) B, C, A, D
(3) B, C, D, A
(4) C, A, D, B
(5) C, D, A, B
(............)

**22.** வணிகமொன்றின் நிதியீட்டல் வழிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - நிறுத்தி வைத்த வருவாய்
B - பங்கு வழங்கல்
C - தொகுதிக்கடன் வழங்கல்
D - பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு
E - குத்தகை

மேலே தரப்பட்ட நிதியீட்டல் வழிமுறைகளுள் உள்ளக, நேர் நிதியீட்டல் வழிமுறைகளாவன,

(1) A யும் B யுமாகும்.
(2) A யும் D யுமாகும்.
(3) B யும் C யுமாகும்.
(4) B யும் E யுமாகும்.
(5) D யும் E யுமாகும்.
(............)

**23.** இலங்கையின் நிதி முறைமையின் உள்ளடக்கத்தைச் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) வணிக வங்கி, திறைசேரி உண்டியல்கள், அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பணச் சந்தை, இலங்கை மத்திய வங்கி
(2) நிதிக் கருவிகள், நிதி நிறுவனங்கள், பணச் சந்தை, இலங்கை மத்திய வங்கி, அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை
(3) நிதி நிறுவனங்கள், நிதி உட்கட்டமைப்பு வசதிகள், நிதிக் கருவிகள், நிதிச் சந்தை, இலங்கை மத்திய வங்கி
(4) இலங்கை மத்திய வங்கி, வணிக வங்கிகள், விசேட வங்கிகள், நிதிக் கம்பனிகள், நிதிக் கருவிகள்
(5) நிதிக் கருவிகள், நிதி நிறுவனங்கள், அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பணச் சந்தை, இலங்கை மத்திய வங்கி

(............)

**24.** கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் கொடுக்கல்வாங்கல் செய்யப்படுகின்ற நிதிக் கருவிகளைச் சரியாக உள்ளடக்கியுள்ள விடை யாது?

(1) சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், பங்கு ஆணைப்பத்திரம், அலகுப் பொறுப்புக்கள்
(2) கம்பனி தொகுதிக்கடன், வணிகப் பத்திரங்கள், சாதாரண பங்குகள், பங்கு ஆணைப்பத்திரம்
(3) திறைசேரி உண்டியல்கள், அலகுப் பொறுப்புக்கள், சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள்
(4) திறைசேரி உண்டியல்கள், பங்கு ஆணைப்பத்திரம், முன்னுரிமைப் பங்குகள், சாதாரண பங்குகள்
(5) சாதாரண பங்குகள், கம்பனி தொகுதிக்கடன், வைப்புச் சான்றிதழ்கள், வணிகப் பத்திரங்கள்

(............)

**25.** வேலைப் பகுப்பாய்வின்போது கவனம் செலுத்தப்படுகின்ற விடயங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - கல்வித் தகைமைகள்
B - சேவைக் காலம்
C - தொழிற் தகைமைகள்
D - கருமங்கள், கடமைகள், பொறுப்புக்கள்
E - பயிற்சியும் அனுபவமும்
F - மேற்பார்வையும் மதிப்பீட்டு நடைமுறையும்
G - சேவைத் திணைக்களம்
H - பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரி

மேலே தரப்பட்ட விடயங்களுள் வேலை விவரணத்துள் காட்டப்படுகின்ற விடயங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) A , B , C , D , H
(2) A , D , E , F , H
(3) B, C, E , F, G
(4) B , D , E , F , G
(5) B , D , F , G , H
(.............)

**26.** ஆடை உற்பத்தி நிறுவனமொன்றின் மனிதவள முகாமைத்துவப் பிரிவு தமது நிறுவனத்தில் தொழில் வெற்றிடங்கள் சில காணப்படுவதை இனங்கண்டுள்ளது. அவ்வெற்றிடங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் தெரிவுசெய்வதற்கும் நிறுவனத்தினால் பின்பற்ற வேண்டிய படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - விண்ணப்பதாரிகளின் சுருக்கமான பட்டியலொன்றைத் தயாரித்தல்
B - வேலை விவரணத்தைத் தயாரித்தல்
C - வேலை விளம்பரத்தைத் தயாரித்தல்
D - நேர்முகப்பரீட்சையினை நடாத்துதல்
E - வேலை குறித்துரைத்தலைத் தயாரித்தல்

மேலே தரப்பட்ட படிமுறைகளை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A , B , E , C , D
(2) A , C , E , B , D
(3) B, C, E, D , A
(4) B , E , C , A , D
(5) C , B , E , A , D
(.............)

**27.** தரவுகளைத் தகவல்களாகப் பரிமாற்றம் செய்யும் கருவி அல்லாதது,

(1) உள்ளீடு
(2) வகைப்படுத்தல்
(3) களஞ்சியப்படுத்தல்
(4) வெளியீடு
(5) பின்னூட்டல்
(.............)

**28.** பின்வரும் அட்டவணையில் தகவல் முறைமைகளைப் பயன்படுத்துகின்ற மட்டங்கள் **X** நிரலிலும் அவற்றைப் பயன்படுத்தும் தரப்பினர் **Y** நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) தந்திரோபாய மட்டம் | A - கணக்காளர்கள், பொறியியலாளர்கள் |
| (ii) முகாமைத்துவ மட்டம் | B - வேலைப்பரிசோதனை மேற்பார்வையாளர்கள், களஞ்சியப்பொறுப்பாளர்கள் |
| (iii) அறிவு மட்டம் | C - தலைவர்கள், பொது முகாமையாளர்கள் |
| (iv) செயற்பாட்டு மட்டம் | D - சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள், நிதி முகாமையாளர்கள் |

**X** நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் முறைமை மட்டங்களுக்கேற்ப **Y** நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அம்முறைமையைப் பயன்படுத்தும் பிரிவினரை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, D, B, C
(2) C, D, A, B
(3) C, D, B, A
(4) D, A, B. C
(5) D, C, A, B
(.............)

**29.** சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்
B - விலை உபாய வழிமுறைகள்
C - போட்டியாளர்களின் விலை உபாய வழிமுறைகள்
D - மேம்படுத்தல் உபாய வழிமுறைகள்

இவற்றுள் உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளில் உள்ளடக்கப்படும் தகவல்களாவன,

(1) A யும் B யுமாகும்.
(2) A யும் D யுமாகும்.
(3) B யும் C யுமாகும்.
(4) B யும் D யுமாகும்.
(5) C யும் D யுமாகும்.
(.............)

**30.** நிறுவனத்தின் முழுமையான திட்டம் தொடர்பில் அதன் வணிகத் திட்டத்தை வாசிப்பவர்களுக்கு விளக்கமொன்றை வழங்குவதும் வாசிப்பவரின் கவனத்தை ஈர்ப்பதுமான அவ்வணிகத்திட்டத்தின் உப பிரிவு .................................... எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்த இடைவெளிக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

(1) நிறைவேற்றுச் சுருக்கம்
(2) வணிக விபரம்
(3) சந்தைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டுத் திட்டம்
(4) நிதித் திட்டம்
(5) மனிதவளத் திட்டம் (.............)

- 31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

**31.** (அ) நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று அடிப்படைகளாவன பொருளாதார, ......................................... மற்றும் ................................. அபிவிருத்தி ஆகியனவாகும்.

(ஆ) நாடொன்றின் பண வழங்கலானது ........................................ கொள்கையினூடாக கட்டுப்படுத்தப்படுவதுடன், பணவழங்கலுக்கும் பொது விலை மட்டத்துக்கும் இடையில் ....................................... தொடர்பு காணப்படுகின்றது.

**32.** (அ) சுவையான பழப்பானங்களை விற்பனை செய்யும் வியாபார நிலையமொன்றை நடாத்திச் செல்லும் சுகுமார், தனது வணிகத்தை விரிவுபடுத்த எண்ணுகின்றார். இதற்காக அவர் மேற்கொள்ளத்தக்க மாற்று வழிமுறைகள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

A - இன்னொரு பழப்பான வியாபார நிலையமொன்றுடன் தொடர்புபடல்

B - பழங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றுடன் தொடர்புபடல்

மேலே A செயன்முறையானது ........................ இணைப்பிற்கும் B செயன்முறையானது ...................... இணைப்பிற்குமுரியதாகும்.

(ஆ) தனியார் துறைக்குரிய வணிக அமைப்புகளின் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. உரிமையின் அடிப்படையில் அந்நிறுவனங்கள் எந்நிறுவன வகைக்கு உரித்தாகும் என்பதனை அவற்றுக்கு எதிரேயுள்ள இடைவெளியில் எழுதுக.

A - ஜெயசிங்கவும் மகன்மாரும் .............................................................................

B - வரையறுக்கப்பட்ட விசால் பி.எல்.சி. .............................................................................

**33.** வணிக நிறுவன வகைகள் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்கள் உண்மையா/பொய்யா என்பதை அவற்றுக்கு எதிரேயுள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

A - பங்குடைமையொன்றில் பங்காளரிடையே ஒப்பந்தமொன்றிருத்தல் கட்டாயமானதாகும். ................................

B - எந்தவொரு கூட்டிணைக்கப்பட்ட கம்பனியும் பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்கி மூலதனத்தைத் திரட்டிக்கொள்ள முடியும். ................................

C - தனியுடைமை வணிகத்தை 1918 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்தல் கட்டாயமானதாகும். ................................

D - 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கரை கடந்த கம்பனியொன்று தனது வணிக நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொள்வதற்கு அனுமதியில்லை. ..............................

**34.** வணிக வங்கியின் கடன் வகைப்படுத்தல் தொடர்பான பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

வணிக வங்கிக் கடன்

A (..............................................) B (..............................................)

C (..........................................) நிலையான வங்கி மேலதிப்பற்று D (.........................................) நுகர்வுக்கான கடன்

**35.** வழங்குனர்களிடமிருந்து மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வது தொடக்கம் உற்பத்தி செய்து உற்பத்திப்பொருட்களை இறுதி நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்தல் வரையிலான அமையவியல் (Logistics) சேவை முறைமையின் அசைவினைக் காட்டும் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப் படத்திலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

A - வழங்குனர் ⟶ B-............................... ⟶ C-............................... ⟶ D-............................... ⟶ E-...............................

**36.** (அ) தீர்வை வரியிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, கனடா, மெக்ஸிகோ ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து ........................................................ ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

(ஆ) அமைப்பொன்றின் இலக்கினை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்காக வெவ்வேறாகக் காணப்படுகின்ற துறைகள்/திணைக்களங்களின் கருமங்களை நிறுவன நோக்கத்துடன் ஒன்றிணைக்கும் செயன்முறை .................................. எனப்படும்.

**37.** (அ) சரக்கிருப்பு மட்டத்தைக் கணிப்பிடும்போது குறித்த காலப்பகுதிக்குரிய பொருள் நுகர்வு மட்டுமன்றி மறுகட்டளை ......................................................, ..................................................... என்பனவும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) ஆகக் குறைந்த சரக்கிருப்பு மட்டமானது ..................................................... எனப்படுவதுடன் இருப்பு தொடர்பான மொத்தக்கிரயம் இழிவடையும் வகையில் ஒரு தடவைக்குக் கட்டளையிட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கை .................................................... எனப்படும்.

**38.** (அ) வணிகமொன்று தனது உற்பத்திப்பொருளுக்கு விலையிடும்போது அடிப்படையில் கவனத்திற் கொள்கின்ற காரணிகளாவன சந்தை, போட்டி, .................................................... மற்றும் அதன் .................................................... என்பனவாகும்.

(ஆ) வணிகமொன்றின் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படுகின்ற சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) வருட இறுதியிலுள்ள பொருட்களின் இருப்பும் கடன்பட்டோரும் முறையே ரூ. 30,000, ரூ. 20,000

(2) முற்பணமாகச் செலுத்திய செலவுகள் ரூ. 10,000

(3) இறுதிக் காசு மீதி ரூ. 20,000

(4) கடன் கொடுதோர் ரூ. 40,000

இவ்வணிகத்தின் தேறிய தொழிற்படு மூலதனம் ................................. ஆகக் காணப்படுவதுடன் விரைவு விகிதம் ....................... ஆகும்.

**39.** (அ) ஊழியர் புரள்வு மற்றும் ஊழியர் உற்பத்தித்திறன் ஆகியவற்றைக் கணிப்பிடும் சூத்திரங்கள் முறையே கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுக.

$$\text{ஊழியர் புரள்வு} = \frac{\text{குறித்த காலப்பகுதியொன்றில் விலகிய ஊழியர் எண்ணிக்கை}}{\text{.............................................}} \times 100$$

$$\text{ஊழியர் உற்பத்தித்திறன்} = \frac{\text{.....................}}{\text{ஊழியர் எண்ணிக்கை}}$$

(ஆ) மனிதவள முகாமைத்துவத்தில் ஊழியர் அசைவினை மேற்கொள்ளக்கூடிய இரு முறைகளாக .........................................................., .......................................................... என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**40.** (அ) வணிக எண்ணங்கள் அனைத்திலுமிருந்து பொருத்தமான வணிக எண்ணங்களை இனங்காண்பதற்காக ............................... பகுப்பாய்வும் முயற்சியாளருக்குக் கூடுதலான அனுகூலங்களைப் வழங்கும் வணிக எண்ணத்தைத் தெரிவுசெய்வதற்காக ................................ பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) வணிகமொன்றிலுள்ள பல்வேறு கருமங்கள், பதவிகள், பிரிவுகள் என்பற்றுக்கிடையில் காணப்படுகின்ற தொடர்பின் மாதிரி நிறுவனக் .......................................... எனப்படுவதுடன் இதனை வரைபடமாக முன்வைத்தல் அமைப்பு ......................................... எனப்படும்.

- 41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளை எழுதுக.

**41.** அங்கீகார வணிகங்கள் தொடர்பிலான இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A நிறுவனம் - அங்கீகாரம் வழங்குபவரின் வியாபாரக் குறியுடனான பொருட்களை அவரிடமிருந்து கொள்வனவு செய்து அவற்றை மீள விற்பனை செய்தல்

B நிறுவனம் - அங்கீகாரம் வழங்குபவரின் வியாபாரக் குறியின் கீழ் பொருட்களை உற்பத்தி செய்து விநியோகித்தல்

மேலே தரப்பட்ட வணிக நிறுவனங்களுக்கு உரித்தான அங்கீகார வணிக முறைகளைக் குறிப்பிட்டு, இலங்கையில் A , B நிறுவனங்களுக்கான ஒவ்வோர் உதாரணம் தருக.

| வணிக நிறுவனம் | வணிக முறை | உதாரணம் |
|---|---|---|
| A நிறுவனம் | ........................................................ | ........................................................ |
| B நிறுவனம் | ........................................................ | ........................................................ |

**42.** முயற்சியாண்மையின் நவீன போக்குகள் தொடர்பிலான சில அறிமுகங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் எம்முயற்சியாண்மைப் போக்கிற்குரியது என்பதைக் குறிப்பிடுக.

1. சமூகத்திற்கு சேவை செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற புத்தாக்கங்கள் ..................................................................
2. சூழலைப் பாதுகாத்தலை நேர் எண்ணக்கருவாகக் கொண்ட முயற்சியாண்மை ..................................................................
3. பல்வேறு நாடுகளிலுள்ள இனங்கள், கலாசாரங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்காண்பதன் மூலம் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் ..................................................................
4. நிறுவனமொன்றில் கருமமாற்றுவதன் மூலம் உருவாகின்ற ஆக்கபூர்வமான தன்மை ..................................................................

**43.** சர்வதேச வியாபாரத்தின்போது சுதந்திர வியாபாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தீர்வை **வரியல்லாத நான்கு தடைகளைப்** பெயரிடுக.

1. ..................................................................... 2. .....................................................................

3. ..................................................................... 4. .....................................................................

**44.** ஹென்றி மின்ற்ஸ்பேக் என்பவரின் வகைப்படுத்தலுக்கேற்ப முகாமையாளரொருவரின் தீர்மானமெடுத்தல் வகிபாகத்திற்குரிய உப வகிபாகங்கள் **நான்கைப்** பெயரிடுக.

1. ............................................................... 2. ...............................................................

3. ............................................................... 4. ...............................................................

**45.** நிறுவனமொன்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நவீன தொழில்நுட்பமுறைகள் **நான்கைப்** பெயரிடுக.

1. ............................................................... 2. ...............................................................

3. ............................................................... 4. ...............................................................

**46.** நிறுவனமொன்றின் உற்பத்திப்பொருள் கலவையில் உள்ளடங்கும் பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிற்கு எதிரிலும் அவை தொடர்பிலான கருத்தினைத் தருக.

1. அகலம் ........................................................................................................................
2. நீளம் ........................................................................................................................
3. ஆழம் ........................................................................................................................
4. பொருத்தப்பாடு ........................................................................................................................

**47.** பின்வரும் படங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் பணத்தின் வகைகளைப் பெயரிடுக.

1. 


...............................................................

2. 

...............................................................

3. 


...............................................................

4. 


...............................................................

**48.** நிறுவனமொன்றிற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்துகொள்ளும்போது அவர்களை புற ஆட்சேர்ப்புச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற **நான்கு** முறைகளைப் பெயரிடுக.

1. ............................................................... 2. ...............................................................

3. ............................................................... 4. ...............................................................

**49.** தரவு ஒழுங்கமைத்தலின்போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தை வகைப்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளைக் குறிப்பிடுக.

1. ............................................................... 2. ...............................................................

3. ............................................................... 4. ...............................................................

**50.** வணிகத் திட்டமொன்றிலுள்ள நிதித் திட்டத்தில் காணப்படும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

1. ............................................................... 2. ...............................................................

3. ............................................................... 4. ...............................................................

* * *

# (32) வணிகக் கல்வி
## வினாத்தாள் II

**அறிவுறுத்தல்கள் :**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி I

**1.** பின்வரும் சம்பவத்தின் உதவியுடன் பகுதி (i), பகுதி (ii) ஆகியவற்றிற்கு விடையளிக்குக.

ரோஜா என்பவர் மல்வானையில் அமைந்துள்ள தனது கட்டடத்தில் 'ரோஜா புறுட்ஸ்' எனும் பெயரில் நிறுவனமொன்றை நடாத்தி வருகின்றார். இந்நிறுவனம் பிரதேசத்திலுள்ள பழங்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து, அவற்றை வாகனங்களின் மூலம் வியாபார நிலையங்களுக்கு விநியோகித்து வருவதுடன், 'ரோஜா மிக்ஸ்' எனும் பெயரில் ரம்புட்டான் பழத்திலிருந்து தயாரிக்கும் சுவையான குடிபான வகையொன்றையும் சந்தைக்கு வழங்குகிறது. இவ்வணிகத்தில் விசேட ஆற்றலுடன் கூடிய பத்து ஊழியர்கள் பணியாற்றுவதுடன் இணையத்தைப் பயன்படுத்தி சந்தை தொடர்பில் மாத்திரமன்றி நவீன உற்பத்தி முறைகள் தொடர்பிலும் அடிக்கடி தகவல்கள் பெறப்படுகின்றன.

(i) (அ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்படுகின்ற தயாரிப்புக்களை பொருட்கள், சேவைகள் என வேறுபடுத்திக் காட்டுக.

(ஆ) மேலே சம்பவத்தில் குறிப்பிடப்படுகின்ற வணிகத்தை வித்தியாசமான **நான்கு** வணிக வகைப்படுத்தல் அடிப்படைகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

(04 புள்ளிகள்)

(ii) ரோஜா புறுட்ஸ் நிறுவனத்தின் 'ரோஜா மிக்ஸ்' உற்பத்திப்பொருளுக்குரிய வணிகச் செயன்முறையை உள்ளீட்டு, வெளியீட்டு வரைபடமொன்றில் விபரமாகக் காட்டுக. (04 புள்ளிகள்)

(iii) தனியார் வைத்தியசாலையொன்றின் மீது அக்கறை காட்டும் **நான்கு** தரப்பினரைக் குறிப்பிடுவதுடன், அந்த ஒவ்வொரு தரப்பினரும் அவ்வாறு அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் **இரண்டு வீதம்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) "இலங்கையின் பிரதான வீதி விபத்துக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் மிக வேகமாக அதிகரித்துச் செல்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சாரதிகளின் கவனயீனத்தினால் மேற்கொள்ளப்படும் பிழையான செயற்பாடுகளே இதற்குப் பிரதான காரணங்களில் ஒன்று என கண்டறியப்பட்டுள்ளது". நீங்கள் தனியார் போக்குவரத்துச் சேவை நிறுவனமொன்றின் உரிமையாளராயின், இந்நிலைமையினைத் தவிர்த்துக் கொள்வதற்காக உங்கள் நிறுவன சாரதிகளுக்கென உருவாக்குகின்ற ஒழுக்கக் கோவையொன்றில் உள்ளடக்க வேண்டிய **நான்கு** ஒழுக்க விதிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நிலைபேறான (sustainable) பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு வணிகமொன்றினால் எடுக்கக்கூடிய **நான்கு** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) 'எக்ஸலன்ட்' நிறுவனத்திற்குச் சென்ற ரமணி என்பவர் அங்கு ஊழியரொருவரினால் தரத்தில் மிக உயர்ந்த வகை என அறிமுகப்படுத்தப்பட்ட மின்சாரக் கொதிகலன் (கேத்தல்) ஒன்றைக் கொள்வனவு செய்தார். அதற்கு வழங்கப்பட்ட உத்தரவாதக் காலப்பகுதியினுள் அதில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக அது செயற்படாது பழுதடைந்தது. இது தொடர்பில் ரமணி எக்ஸலன்ட் நிறுவனத்திற்கு அறிவித்த போதும் நியாயமான தீர்வொன்று அவருக்குக் கிடைக்கவில்லை.

(அ) இது தொடர்பில் நியாயமான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ரமணி அறிவிக்க வேண்டிய நிறுவனம் எது? (01 புள்ளிகள்)

(ஆ) மேலே தரப்பட்ட சம்பவத்தில் எக்ஸலன்ட் நிறுவனத்தினால் மீறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு, நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நுகர்வோரொருவர் நிறைவேற்ற வேண்டிய **நான்கு** பொறுப்புக்களையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**2.** (i) குறுகியகாலம் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு நாடு திரும்பிய யாக்கூப் என்பவர் கண்டி நகரில் புதிய கட்டடமொன்றை நிறுவி அதில் உள்நாட்டுத் தானிய வகைகளை மாவாக அரைத்து, அதனைப் பொதி செய்து விற்பனை செய்வதற்கு 'நம் நாடு' எனும் பெயரில் வணிகமொன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றார்.

(அ) இக்கருமத்தை நிறைவேற்றுவதற்கு யாக்கூப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்கள் அல்லது அனுமதிப் பத்திரங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்கள் எவை என்பதையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) யாக்கூப்பின் வணிகத்திற்கு அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** வசதிகளைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) (அ) இலங்கையில் கூட்டுறவு வணிகங்களின் தோல்வியில் செல்வாக்குச் செலுத்திய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'உலகம் முழுவதும் பிரபல்யமடைந்துள்ள அங்கீகார வணிகங்கள் இலங்கைச் சந்தையிலும் பிரவேசிக்கும் போக்கொன்று காணப்படுகின்றது'. அவ்வாறான வணிகங்களுடன் தொடர்புடைய அங்கீகாரம் பெறுபவர் பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) 'இலங்கையில் அரசதுறை சார்ந்த வணிகங்கள் பல்வேறு வடிவங்களில் செயற்படுகின்றன'. அவற்றுள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களின் குணாதிசயங்கள் **நான்கை** ஒப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தனியார் மற்றும் கூட்டுறவுத்துறை போன்றே அரசாங்கத்தினாலும் வணிகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு அரசாங்கமானது வணிகக் கருமங்களில் ஈடுபடுவதற்கான **நான்கு** காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) "முயற்சியாண்மையினூடாக முயற்சியாளருக்கு மாத்திரமன்றி நாட்டிற்கும் சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கப்பெறுகின்றன." அவ்வாறான சமூக, பொருளாதார அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) "ஒரு நாட்டின் அபிவிருத்தியில் கூடுதலான பங்களிப்புக்கள் முயற்சியாளராலேயே நிறைவேற்றப்படுகின்றன". வணிகரையும் முயற்சியாளரையும் **மூன்று** விடயங்களினூடாக ஒப்பிட்டு, இக்கூற்று தொடர்பாக உமது கருத்துக்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திலேயே அவற்றில் பெரும்பாலானவை தோல்வியுறுகின்றன. அவ்வாறு தோல்வியுறுவதில் தாக்கம் செலுத்துகின்ற, வணிகரால் கட்டுப்படுத்தக்கூடியதும் கட்டுப்படுத்த **முடியாததுமான** காரணிகள் **இரண்டு வீதம்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகங்களை பாரியளவு, சிற்றளவு என வகைப்படுத்துவதற்கு பல்வேறு நிறுவனங்களினால் பல்வேறு நியதிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறான நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அந்த ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு நியதியை வீதம் தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** (i) (அ) அண்மிய பணத்தின் பிரதான பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு, அண்மிய பணத்திற்கான **இரண்டு** உதாரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) சமகால உலகில் இலத்திரனியல் பணம் பிரபல்யம் பெற்றுக் காணப்பட்டாலும் நாணயம் மற்றும் நாணயத்தாள்களினால் கொடுக்கல்வாங்கல் செய்வதற்கே பெரும்பாலான வணிகர்கள் பழக்கப்பட்டுள்ளனர். நாணயம், நாணயத்தாள்களைப் பயன்படுத்துவதனால் வணிகர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் யாவை என்பதை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) உரிமம் பெற்ற வணிக வங்கியொன்றை, உரிமம் பெற்ற விசேட வங்கியிலிருந்து வேறுபடுத்துகின்ற **இரண்டு** கருமங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) குறுங்கால வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ள சிற்றளவு வணிகரான சமந்தா என்பவருக்கு அவரது நண்பரான பிரியந்தன், வங்கிக் கடனை விட வங்கி மேலதிகப் பற்றொன்றைப் பெற்றுக்கொள்வதே சிறந்தது எனக் கூறுகின்றார். பிரியந்தனின் இக்கருதுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்களது விடைக்கான **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) 'இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதனூடாக அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வாடிக்கையாளர்களுக்கு அனுகூலங்கள் கிடைக்கப்பெறும்'. இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்களது விடைக்கான **மூன்று** காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற லங்கா செற்றல் முறைமை (Lanka Settle System) வணிகக் கருமங்களின் வெற்றிக்கு உதவும் விதத்தை விளக்குக.

(02 புள்ளிகள்)

(iv) (அ) வணிகக் கருமங்களை மேற்கொள்கின்றபோது வணிகர்கள் பொறுப்புக் காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது. பொறுப்புக் காப்புறுதி என்பதனை அறிமுகப்படுத்தி, அதன்கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்தங்கள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக.

(02 புள்ளிகள்)

(ஆ) காப்புறுதியுடன் தொடர்புடைய பின்வரும் எண்ணக்கருக்கள் காப்புறுதி செய்பவருக்கு எவ்வாறு முக்கியத்துவமானதாய் அமையும் என்பதை விளக்குக.

(1) இழப்பீட்டுத் தத்துவம்

(2) மறுகாப்புறுதி (02 புள்ளிகள்)

(v) பயனுறுதியான தொடர்பாடலின்றி எந்தவித கருமத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. வணிகக் கருமங்களின் வெற்றிக்காக தொடர்பாடலைப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விவரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4.** (i) (அ) அமையவியல் (Logistics) என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனங்களின் தன்மைக்கும் உற்பத்திப்பொருட்களின் தன்மைக்குமேற்ப அமையவியல் சேவை முறைமைகள் பல்வேறு வகைப்படும். அம்முறைமைகளில் **இரண்டை** விவரிக்குக.

(02 புள்ளிகள்)

(ii) (அ) பிரதான வீதிப்போக்குவரத்து முறைமையினை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் பாரிய செலவுகளை மேற்கொள்கின்றது. பிரதான வீதிப் போக்குவரத்து முறைமையினை விருத்தி செய்வது வணிகர்களுக்கும் நுகர்வோருக்கும் முக்கியத்துவமானதாய் அமையும் விதங்கள் **இரண்டு** வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) "சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக வியாபாரத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன." சில்லறை வியாபாரத்தில் ஏற்பட்டுள்ள நவீன போக்குகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(iii) சர்வதேச அமைப்புக்களும் வியாபார ஒப்பந்தங்களும் வெளிநாட்டு வியாபாரத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான தாக்கங்களினால் ஒரு நாட்டுக்கு ஏற்படும் சாதகமான, பாதகமான நிலைமைகள் **நான்கு** வீதம் தருக. (04 புள்ளிகள்)

(iv) உற்பத்திப்பொருளொன்றை உற்பத்தி செய்வதிலிருந்து அதனை நுகர்வோர் கைகளுக்குக் கிடைக்கச் செய்வது வரையிலான செயன்முறையில் பெரும்பாலும் இடை நடுவர்களின் உதவி அவசியமானது. இச்செயன்முறையுடன் தொடர்புடைய இடை நடுவர்களைப் பெயரிட்டு, அவ்வாறு இடை நடுவர்களைப் பயன்படுத்துவதனூடாக உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் கிடைக்கும் அனுகூலங்கள் **மூன்று** வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) பசளை வகைகளை இறக்குமதி செய்து சந்தைப்படுத்தும் நிறுவனமொன்று, தேயிலை உற்பத்திக்குத் தேவையான இரசாயன பசளை வகையொன்றை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கின்றது. இதற்காக அந்நிறுவனம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை ஒழுங்குமுறையில் விவரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

**5.** (i) றப்பர் உற்பத்தி நிறுவனமொன்று, றப்பருடன் இணைந்த மனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்து நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களிலும் விற்பனைக் கிளைகளை நிறுவி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்து வருகின்றது. அனைத்து உற்பத்திப்பொருட்களுக்குமான கணக்கீட்டுக் கருமங்களும் எழுத்தாவணச் செயற்பாடுகளும் பிரதான அலுவலகத்தினூடாகப் பேணப்படுகின்றன. இலாபத்தினளவை அதிகரித்துக் கொள்வதற்கு நிறுவனத்தை மறுசீரமைப்பது தொடர்பில் உங்களது கருத்து கேட்கப்படுகின்றது. அதற்கேற்ப இந்நிறுவனத்தை திணைக்களமயப்படுத்தக்கூடிய பல்வேறு அடிப்படைகளை உதாரணங்களுடன் முன்மொழிக. (04 புள்ளிகள்)

(ii) 'வெற்றிகரமான திட்டமிடலானது ஏனைய முகாமைத்துவக் கருமங்களின் வெற்றிக்கு அத்தியாவசியமானது.' இக்கூற்றினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிறுவனமொன்றில் பெரும்பாலான தீர்மானங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே எடுக்கப்படுகின்றன. அவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்கள் வெற்றியடைவதற்கு தீர்மானமெடுக்கும் செயன்முறையின்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகளை ஒழுங்குமுறையில் விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) நீங்கள் பணிபுரிகின்ற நிறுவனத்திற்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்குநர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான பட்டியலொன்றை நான்கு நியதிகளை உள்ளடக்கியதாகத் தயாரித்து, அந்த ஒவ்வொரு நியதியையும் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(v) மோட்டர் வாகனங்களை உற்பத்தி செய்யும் பாரியளவு நிறுவனமொன்றிற்குப் பொருத்தமான தள அமைப்புத் திட்டம் எது? அந்தத் தள அமைப்புத் திட்டத்தைத் தெரிவுசெய்தமைக்கான காரணங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (i) உற்பத்தி நிறுவனமொன்று அதன் உற்பத்திச் செயன்முறைக்குப் பயன்படுத்துகின்ற மூலப்பொருளானது மிக விரைவில் அழிவடையக்கூடிய தன்மையினைக் கொண்டுள்ளது. அதேபோன்று உற்பத்திப்பொருளை உற்பத்தி செய்து முடித்தவுடனேயே சந்தைக்கு அனுப்புவது நிறுவனத்தின் கொள்கையாகுமெனின் இந்நிறுவனத்திற்கு மிகப் பொருத்தமான இருப்புக் கட்டுப்பாட்டு முறையினைக் குறிப்பிட்டு, அம்முறையின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் **மூன்று** வீதம் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) வணிகரொருவர் சுவையூட்டிகள் சேர்க்கப்படாத சத்துள்ள பழப்பானமொன்றை பாடசாலை மாணவர்களுக்காக சந்தையில் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளார். அதற்குப் பொருத்தமான பண்டப் பெயரொன்றை (Brand name) உருவாக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? அவருக்கு அவ்வாறான பண்டப்பெயரொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) தற்காலத்தில் பொதியிடலானது உற்பத்திப்பொருளுக்கு அத்தியாவசியமானதொரு விடயமாகக் காணப்படுகின்றது. பொதியிடலொன்றைத் திட்டமிடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) "அனைத்து வணிக நிறுவனத்துக்கும் சந்தையில் நிலைத்திருத்தல் கடினமானதாகும்." சந்தையில் நிலைத்திருத்தல் என்றால் என்ன என்பதை விளக்கி, அவ்வாறு நிலைத்திருக்கக்கூடிய முறைகள் யாவை என்பதைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) தற்காலத்தில் வேலைப்பளுவுடன் வாழ்கின்ற வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த வங்கிச் சேவையை வழங்குவதற்காக வங்கியாளர்களினால் சந்தைப்படுத்தல் கலவை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(v) சில்லறை வியாபாரமொன்றைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ள அஜித் நிதியீட்டம் தொடர்பிலான பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ளார்.

(அ) எக்கருமங்களுக்காக அவருக்கு நிதி தேவைப்படுகின்றது என்பதை உதாரணங்களுடன் விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) அந்நிதித் தேவையினை நிறைவு செய்வதற்கான முறையொன்றைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் யாவை என்பதைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**7.** (i) வரையறுக்கப்பட்ட ஜெயசக்தி கம்பனியின் கணக்குகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான தரவுத் தொகுதியொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 10,000,000 |
| விற்பனைக்கிரயம் | 6,000,000 |
| மொத்த இலாபம் | 4,000,000 |
| செலவுகள் | 1,000,000 |
| காலப்பகுதிக்குரிய இலாபம் (தேறிய இலாபம்) | 3,000,000 |

**31.03.2017 இல் கணக்கு மீதிகள்:**

| | ரூ. |
|---|---|
| காணியும் கட்டடமும் | 25,000,000 |
| மோட்டார் வாகனம் | 5,000,000 |
| சரக்கிருப்பு | 2,000,000 |
| கடன்பட்டோர் | 1,500,000 |
| வங்கி மீதி | 500,000 |
| கடன் கொடுத்தோர் | 1,000,000 |
| 01.04.2016 இல் சரக்கிருப்பு | 1,000,000 |

(அ) மேலே தரப்பட்ட தரவுகளின் உதவியுடன் பின்வரும் விடயங்களைக் கணிக்க.
- A. மொத்த இலாப வீதம்
- B. தேறிய இலாப வீதம்
- C. நடைமுறை விகிதம்
- D. இருப்புப் புரள்வு விகிதம் (02 புள்ளிகள்)

(ஆ) ஜெயசக்தி கம்பனியின் பின்வரும் விடயங்கள் பற்றி விளக்குக.
- A. திரவத்தன்மை
- B. இருப்புப் புரள்வு தடவைகள் (02 புள்ளிகள்)

(ii) வரையறுக்கப்பட்ட அரலிய பொதுக் கம்பனியின் இலாபத்தன்மையானது கடந்த சில வருடங்களிலிருந்து குறைந்து கொண்டு வருகின்றது. இலாபத்தன்மையினை அதிகரித்துக் கொள்வதற்காக வணிகத்தை நவீனமயப்படுத்துவதற்கு ஐந்து மில்லியன் ரூபா மேலதிக மூலதனம் தேவைப்படுகின்றது என இயக்குநர் சபையானது நிதி முகாமையாளருக்கு அறிவித்துள்ளது. தற்போது இக்கம்பனியில் மிகை இணைப்பு நிலைமையொன்று காணப்படுவதுடன், இம்மேலதிக மூலதனத்தைத் திரட்டிக்கொள்வதற்கு சாதாரண பங்குகளை வழங்குவதா அவ்வாறின்றி முன்னுரிமைப் பங்குகளை வழங்குவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது. அதற்கேற்ப இவ்விரண்டு முறைகளில் எம்முறையினூடாக நிதியீட்டம் செய்வது மிகப் பொருத்தமானது? உங்களது விடைக்கான காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) தற்போது இயங்கி வருகின்ற ஆடை உற்பத்தி நிறுவனமொன்று தனது உற்பத்திக் கருமங்களை விரிவுபடுத்தத் தீர்மானித்துள்ளது. புதிய தொழிற்சாலைக்குத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையினைத் திட்டமிடும் கருமம் உங்களுக்கு வழங்கப்பட்டிருப்பின், இது தொடர்பில் நீங்கள் கவனத்திற் கொள்ளும் விடயங்கள் யாவை என்பதைச் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) தற்போது ஊழியர் செயற்றிறன் மதிப்பீடு தொடர்பில் தற்போது கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டு** வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனமொன்றிற்கு கணினி இயக்குநர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கான வேலை குறித்துரைத்தலில் காட்டப்படுகின்ற விசேட திறன்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய திறன்கள் யாவை? (02 புள்ளிகள்)

(v) ஊழியர் புரள்வானது வணிகங்கள் முகம்கொடுகின்ற பாரிய பிரச்சினையொன்றாகும். ஊழியர் புரள்வு அதிகரிப்பில் தாக்கம் செலுத்தத்தக்க **நான்கு** காரணிகளைக் குறிப்பிட்டு, அவற்றுக்கான தீர்வுகளை முன்மொழிக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

8. (i) (அ) ‘தகவல் முறைமை’ என்றால் என்ன என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிக அமைப்பொன்றில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தரவு ஒழுங்கமைத்தல் செயன்முறை ஒன்றின் கருமங்களை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமையானது (TPS) வணிக அமைப்பொன்றில் செயற்பாட்டு முகாமையாளர்களுக்கு எவ்வாறு பயனுடையதாக அமையும் என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) கையியக்க முறையினால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான வணிகக் கருமங்கள் இன்று கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற வணிகக் கருமங்கள் **நான்கினைப்** பெயரிட்டு, அவை ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** உதாரணங்கள் வீதம் தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) ‘தகவல்’, ‘தகவல் தொழில்நுட்பம்’ ஆகியவற்றை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) நுகர்வோர் தமது அன்றாடக் கருமங்களுக்காக பல்வேறு வசதிகளை இணையத்தினூடாகப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு நுகர்வோருக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) சுதாகர் என்பவர் சிற்றளவு முயற்சியாளரொருவராவார். அவர் தனது வணிகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தார்.

(அ) சுதாகர், வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்கும்போது அதிலுள்ள நிதித் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சுதாகரினால் தயாரிக்கப்பட்ட வணிகத் திட்டத்தின் நிறைவேற்றுச் சுருக்கமானது அவரால் மிகக் கவர்ச்சிகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. நிறைவேற்றுச் சுருக்கத்தைக் கவர்ச்சிகரமாகத் தயாரிப்பதனால் கிடைக்கும் அனுகூலங்கள் யாவை? (02 புள்ளிகள்)

(v) (அ) வணிகத் திட்டமொன்று **இல்லாமல்** வணிகமொன்றை ஆரம்பிப்பது விவேகமான கருமமொன்றல்ல. இக்கூற்றினை உறுதிப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) சுனிமல் என்பவர் செங்கற்களைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றார். அதற்காக அவர் தயாரிக்க வேண்டிய வணிகத் திட்டத்திலுள்ள சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உதாரணங்களுடன் விவரிக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

# (33) கணக்கீடு

## வினாத்தாள் கட்டமைப்பு

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | - | **நேரம் : 02 மணித்தியாலங்கள்**<br>இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் சுருக்கமாக விடையளிக்கும் வினாக்கள் **20** இனையும் உள்ளடக்கியுள்ளது. **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு **04** புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் **200** ஆகும். |
| வினாத்தாள் II | - | **நேரம் : 03 மணித்தியாலங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)<br>இவ்வினாப்பத்திரம் **ஆறு** வினாக்களை உள்ளடக்கியது. **முதலாவது மற்றும் இரண்டாவது** வினாக்கள் கட்டாய வினாக்கள் என்பதுடன் ஒரு வினாவிற்கு **40** புள்ளிகள் வீதம் **80** புள்ளிகள் வழங்கப்படும். ஏனைய நான்கு வினாக்களுள் மூன்று வினாக்கள் தெரிவு வினாக்கள் என்பதுடன் ஒரு வினாவிற்கு **40** புள்ளிகள் மொத்தப்புள்ளிகள் **120** ஆகும்.<br>வினாத்தாள் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 200 |

இறுதிப் புள்ளியைக் கணித்தல் = வினாத்தாள் I = 200
வினாத்தாள் II = 200
இறுதிப்புள்ளி = 400 ÷ 4
= 100

### வினாத்தாள் I

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் :**

சகல வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்கவும்.

---

- இலக்கம் **1** தொடக்கம் **30** வரையிலான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையினைத் தெரிவு செய்து **விடையின் இலக்கத்தை** புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** வணிக அலகு தொடர்பில் பல்வேறு அக்கறையுடைய தரப்பினரும் அவர்கள் அவ்வாறு அக்கறை காட்டுவதற்கான காரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன :

| தரப்பினர் | அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் |
|---|---|
| 1. உரிமையாளர்கள் | A உரிய முறையில் வரிசெலுத்தப்படுகின்றதா என்பதை உறுதிசெய்தல் |
| 2. ஊழியர்கள் | B எதிர்கால விருத்திக்கு தேவையான விடயங்களைத் தீர்மானித்தல் |
| 3. வாடிக்கையாளர்கள் | C தொழில் பாதுகாப்பானதா என்பதை உறுதிசெய்தல் |
| 4. அரசு | D பொருட்கள் சேவைகளை தொடர்ச்சியாகக் கொள்வனவு செய்வதற்கான இயலுமையை உறுதிப்படுத்தல் |
| 5. முகாமையாளர்கள் | E முதலீட்டுக்குப் பொருத்தமான திரும்பல் பெறப்படுவதனை உறுதி செய்தல் |

மேலே தரப்பட்ட ஒவ்வொரு தரப்பினரும் வணிக அலகின் மீது அக்கறை காட்டுவதற்கான காரணங்களை ஒழுங்கு முறையாகக் காட்டும் விடை எது?

(1) B, A, D, E, C (2) B, C, E, A, D
(3) E, C, D, A, B (4) E, C, D, B, A
(5) E, D, C, B, A (............)

**2.** சந்தியா வணிகத்தின் 2018.04.01 இல் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன:

காசுக் கொள்வனவு ரூபா 40 000
கடன் கொள்வனவு ரூபா 60 000

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) சொத்து அதிகரித்தல் ரூ. 60 000 - பொறுப்பு குறைவடைதல் ரூ. 60 000
(2) சொத்து அதிகரித்தல் ரூ. 60 000 - பொறுப்பு அதிகரித்தல் ரூ. 60 000
(3) சொத்து அதிகரித்தல் ரூ. 100 000 - பொறுப்பு அதிகரித்தல் ரூ. 100 000
(4) சொத்து குறைவடைதல் ரூ. 100 000 - பொறுப்பு அதிகரித்தல் ரூ. 100 000
(5) உரிமையாண்மை அதிகரித்தல் ரூ. 100 000 - சொத்து அதிகரித்தல் ரூ. 100 000

(............)

**3.** வரையறுக்கப்பட்ட துலானி கம்பனியின் கொள்வனவுப்பட்டியலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதியொன்று கீழே தரப்பட்டுள்ளது:

| திகதி | விநியோகிப்போர் | பெறுமதி (ரூ.'000) |
|---|---|---|
| 05.04.2018 | வரையறுக்கப்பட்ட பமீதா கம்பனி | 400 |
| | வியாபாரக்கழிவு 10% | (40) |
| | | 360 |
| நிபந்தனை : ஒரு மாதத்தினுள் பணம் செலுத்தப்படுமாயின் 10% கழிவு வழங்கப்படும். | | |

வரையறுக்கப்பட்ட துலானி கம்பனி மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கலுக்குரிய பணத்தினை 30.04.2018 இல் செலுத்தியது. கழிவினைப் பதிவு செய்வதற்குரிய சரியான இரட்டைப் பதிவு எது?

| | | வரவு (ரூபா) | | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| (1) | கொடுத்த கழிவுக்கணக்கு | 36 000 | கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு | 36 000 |
| (2) | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 36 000 | பெற்ற கழிவுக் கணக்கு | 36 000 |
| (3) | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 40 000 | பெற்ற கழிவுக் கணக்கு | 40 000 |
| (4) | கொடுத்த கழிவுக் கணக்கு | 40 000 | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 40 000 |
| (5) | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 76 000 | பெற்ற கழிவுக் கணக்கு | 76 000 |

(............)

**4.** சில்லறைக் காசு முற்பண முறையினைப் (Imprest) பயன்படுத்தும் வணிகமொன்றின் மாதாந்த சில்லறைக் காசு முற்பணத்தின் பெறுமதி ரூபா 5 000 ஆகும். மாத ஆரம்பத்திலேயே முற்பணமானது மீள் நிரப்பப்பட்டுவதுடன் ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களுக்குமாக வெவ்வேறாக பிரதம காசாளரினால் சில்லறைக் காசாளருக்கு வழங்கப்பட்டு மீள் நிரப்பிய மொத்தத் தொகை ரூபா 7 400 ஆகும். பெப்ரவரி மாத ஆரம்பத்தில் சில்லறைக் காசாளரின் கையில் ரூபா 600 மீதியாக இருந்ததுடன் ஜனவரி மாத ஆரம்பத்தில் மீள்நிரப்பலுக்கு முன்னர் சில்லறைக் காசாளரிடம் காணப்பட்ட தொகையானது:

(1) ரூபா 1 800 (2) ரூபா 2 000
(3) ரூபா 2 400 (4) ரூபா 3 000
(5) ரூபா 4 400

(............)

**5.** சுமோதன் வணிகத்தின் 31.03.2018 இல் தயாரித்த பரீட்சை மீதியின் மொத்தமானது சமப்படாமையினால் வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டு, வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டது. தொங்கல் கணக்கின் மீதி நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்பட்டது.

வரைபு வருமானக் கூற்றில் காட்டப்பட்ட தேறிய இலாபம் ரூபா 140 000 ஆகும். பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது பின்வரும் வழுக்களும் விடுபட்டவைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

* வெளித்திரும்பல் ரூபா 16 000 கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.
* செலுத்திய வங்கிக் கடன் வட்டி ரூபா 4 000 ஆனது கடன் வட்டிக் கணக்கு மற்றும் காசுக்கணக்கு இரண்டிலும் செலவு வைக்கப்பட்டிருந்தது.
* பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் ரூபா 2 000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

சரியான தேறிய இலாபத்தையும், தொங்கல் கணக்கில் காணப்பட்ட மீதியையும் முறையாகக் காட்டுவது?

| | சரியான தேறிய இலாபம் (ரூபா) | தொங்கல் கணக்கின் மீதி (ரூபா) |
|---|---|---|
| (1) | 146 000 | 6 000 (செலவு) |
| (2) | 146 000 | 10 000 (வரவு) |
| (3) | 148 000 | 10 000 (செலவு) |
| (4) | 148 000 | 14 000 (வரவு) |
| (5) | 150 000 | 18 000 (செலவு) |

(............)

**6.** மாதவி வணிகத்தின் 31.03.2018 இல் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 44 000 ஆகக் காணப்பட்டது. அத்திகதியில் கடன்கொடுத்தோர் பட்டியலின் மொத்த மீதியானது கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் சமப்படவில்லை.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது பின்வரும் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- காசோலையொன்று மறுக்கப்பட்டமை காரணமாக நிறுவனத்திற்கு கிடைத்த ரூபா 2 000 கழிவினை நீக்குவதற்கான பதிவானது கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- பெற்ற கழிவு ரூபா 5 000, குறித்த கடன்கொடுத்தோரின் கணக்கில் 500 என வரவு வைக்கப்பட்டிருந்தது.
- ரூபா 18 000 கொள்வனவுப் பட்டியலொன்று குறித்த கடன் கொடுத்தோர் கணக்கில் ரூபா 8 000 எனப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

31.03.2018 இல் **சீராக்கிய கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி** மற்றும் **சீராக்கப்பட முன்னர் கடன் கொடுத்தோர் பட்டியலின் மொத்த மீதி** என்பவற்றை முறையாகக் காட்டுவது எது?

(1) ரூபா 42 000, ரூபா 36 500
(2) ரூபா 43 500, ரூபா 58 000
(3) ரூபா 46 000, ரூபா 38 500
(4) ரூபா 48 000, ரூபா 42 500
(5) ரூபா 48 000, ரூபா 53 500 (............)

**7.** சில்லறை வியாபார வணிகமொன்று, குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்த மோட்டார் வாகனமொன்றை நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் இனங்காண்பதற்கு அடிப்படையாக அமைகின்ற கணக்கீட்டு எண்ணக்கரு எது?

(1) அலகு சார் எண்ணக்கரு
(2) பாதுகாப்பு எண்ணக்கரு
(3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
(4) இணைத்தல் எண்ணக்கரு
(5) பண அளவீட்டு எண்ணக்கரு (............)

**8.** கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் அறிக்கையிடும்போது வரலாற்றுக் கிரய எண்ணக்கருவிலிருந்து விலகியிருக்கக் கூடிய சந்தர்ப்பமொன்றாகக் இனங்காணக்கூடியது எது?

(1) LKAS 16 (ஆதனம் பொறி மற்றும் உபகரணம்) நியமத்திற்கேற்ப இயந்திரமொன்றை இனங்கண்டு அளவிடும் போதாகும்.
(2) FIFO முறையில் இருப்பினை மதிப்பிடும் போதாகும்.
(3) LKAS 2 (இருப்பு) நியமத்திற்கேற்ப வருட முடிவில் இருப்பினை மதிப்பிடும் போதாகும்.
(4) ஊழியர் சம்பளத்தினை அறிக்கைப்படுத்தும் போதாகும்.
(5) மீள் விற்பனை செய்யும் நோக்கில் பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்யும் போதாகும்.

(............)

**9.** சனத் வணிகமானது மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்கி வருமானத்தை பெற்று வருகின்றது. 31.03.2018 இலும் 01.04.2017 இலும் காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு

| | 31.03.2018 இல் (ரூபா) | 01.04.2017 இல் (ரூபா) |
|---|---|---|
| பெற்ற வாடகை முற்பணம் | 250 000 | 200 000 |
| பெறவேண்டிய வாடகை வருமானம் | 350 000 | 400 000 |

31.03.2018 இல் முடிவடையும் வருடத்தினுள் பெற்ற மொத்த வாடகை ரூபா 1 300 000 ஆகும். 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்குரிய வாடகை வருமானத்தின் பெறுமதி எது?

(1) ரூபா 110 000 (2) ரூபா 155 000
(3) ரூபா 1 200 000 (4) ரூபா 1 300 000
(5) ரூபா 1 450 000 (.............)

**10.** வரையறுக்கப்பட்ட திலீப் கம்பனியின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **ரூ.'000** |
|---|---|
| 01.04.2017 இல் வியாபார கொடுக்குமதிகள் | 80 |
| 31.03.2018 வியாபார கொடுக்குமதிகள் | 120 |
| வெளித்திரும்பல்கள் | 230 |
| கொள்வனவுகள் | 9 200 |
| பெற்ற கழிவுகள் | 100 |
| காலம் கடந்த கடனுக்கு விதித்த வட்டி | 40 |

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தினுள் வியாபார கொடுக்குமதிகளுக்காக செலுத்திய தொகை எது?

(1) ரூபா 7 700 000 (2) ரூபா 8 790 000
(3) ரூபா 8 870 000 (4) ரூபா 8 970 000
(5) ரூபா 9 200 000 (.............)

**11.** ரவி கம்பனி கிரயத்தில் 25% மொத்த இலாபத்துடன் பொருட்களை விற்பனை செய்கின்றது. 01.04.2017 தொடக்கம் 31.03.2018 வரையிலான நிதியாண்டிற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | **ரூ.'000** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | - | 300 |
| இறுதி இருப்பு | - | 250 |
| கொள்வனவுகள் | - | 1 200 |
| சுங்கத்தீர்வையும் உட்சுமைக் கூலியும் | - | 150 |
| விற்பனையின் அடிப்படையிலான தரகு | - | 200 |

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தின் விற்பனையின் பெறுமதி எது?

(1) ரூபா 1 550 000 (2) ரூபா 1 750 000
(3) ரூபா 1 800 000 (4) ரூபா 1 950 000
(5) ரூபா 2 000 000 (.............)

**12.** இலாப நோக்கற்ற வணிகங்கள் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் **பிழையானது** எது?

(1) வணிகத்தில் செலவை விட வருமானம் கூடுதலாகக் காணப்படின் அது மிகையாக இனங்காணப்படும்.
(2) வணிகத்தில் மிகைகளின் மூலம் உருவாக்கப்படுகின்ற நிதியானது உரிமையாண்மையின் பகுதியொன்றாகும்.
(3) வணிகத்தில் நிலுவை சந்தா சொத்தாக இனங்காணப்படும்.
(4) வணிகங்கள் தமது விசேட தேவைகளுக்காக வேறு நிதிகளை வைத்திருக்கமுடியும்.
(5) வணிகங்கள் இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பேணுவதில்லை. (.............)

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 13 ஆம் 14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

சமன் மற்றும் சுதத் பங்குடைமை வணிகத்தின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் பின்வருமாறு.

**நடைமுறைக் கணக்கு** (ரூபா)

| | சமன் | சுதத் | | சமன் | சுதத் |
|---|---|---|---|---|---|
| | | | 01.04.2017 மீ/வ | 80 000 | 60 000 |
| | | | சம்பளம் | 50 000 | 40 000 |
| | | | மூலதன வட்டி 10% | 30 000 | 20 000 |
| 31.03.2018 மீ/செ | 220 000 | 150 000 | இலாபப் பங்கு | 60 000 | 30 000 |
| | 220 000 | 150 000 | | 220 000 | 150 000 |

**13.** பங்காளரிடையே பங்குடைமை ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தாது 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி, இப்பங்குடைமை வணிகம் செயற்படுமாயின் 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான சுதத்தின் இலாபப்பங்கு எவ்வளவு?

(1) ரூபா 45000 (2) ரூபா 70000 (3) ரூபா 90000
(4) ரூபா 115000 (5) ரூபா 185000 (............)

**14.** 31.03.2018 இல் புதிய பங்காளராக சஹறன் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் அவர் ரூபா 100 000 வை மூலதனமாக பங்குடமையில் முதலீடு செய்தார். இத்திகதியில் நன்மதிப்பின் பெறுமதி ரூபா 90 000 வாக மதிப்பிடப்பட்டது. சமன், சுதத் மற்றும் சஹறன் மூன்றுபேரும் சமமாக இலாப அல்லது நட்டத்தைப் பகிர்ந்து கொள்வதற்குத் தீர்மானித்தனர். நன்மதிப்புக் கணக்கொன்று ஏடுகளில் பேணப்படுவதில்லை என்பதுடன் நன்மதிப்புத் தொடர்பாக சகல சீராக்கங்களும் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படும். புதிய பங்காளர் இணைக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு பங்காளரினது சரியான உரிமையாண்மையினைக் காட்டுவது எது?

| | சமன் (ரூ.) | சுதத் (ரூ.) | சஹறன் (ரூ.) |
|---|---|---|---|
| (1) | 300000 | 20000 | 100000 |
| (2) | 330000 | 200000 | 70000 |
| (3) | 330000 | 230000 | 130000 |
| (4) | 360000 | 320000 | 100000 |
| (5) | 550000 | 350000 | 70000 |

(............)

**15.** அமல் மற்றும் கமல் பங்குடைமையின் 31.03.2018 இல் நடைமுறைக் கணக்கின் செலவு மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன:

- அமல் (ரூபா) 140 000
- கமல் (ரூபா) 120 000

31.03.2018 இல் முடிவடையும் வருடத்தில் நடைமுறைக் கணக்கினைத் தயாரிக்கும்போது பின்வருவன தொடர்பில் எவ்விதச் சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும் வணிகத்தின் வருமானக் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

- கமல் தனது சொந்தக் காசிலிருந்து வணிகத்தின் கட்டட வாடகையாகிய ரூபா 25000வை செலுத்தியிருந்தார்.
- அமலின் காப்புறுதிக் கட்டணமாகிய ரூபா 12 000 வணிகத்தின் காசிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.
- அமல் மற்றும் கமல் என்போரின் சம்பளமாக தலா ரூபா 40 000 நடைமுறைக் கணக்கில் பதிவுசெய்யப்படவில்லை.

மேலே தரப்பட்டவைகளை சீராக்கிய பின்னர் 31.03.2018 இல் அமல் மற்றும் கமல் என்போரின் நடைமுறைக் கணக்கின் சரியான மீதியைக் காட்டுவது எது?

| | அமல் (ரூபா) | கமல் (ரூபா) |
|---|---|---|
| (1) | 148 000 | 205 000 |
| (2) | 168 000 | 185 000 |
| (3) | 205 000 | 123 000 |
| (4) | 205 000 | 148 000 |
| (5) | 205 000 | 275 000 |

(............)

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 16 ஆம் 17 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

i வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் நிதிநிலைமைக்கூற்றுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்களில் சில பின்வருமாறு:

| | **31.03.2018 ஆம் திகதி** (ரூபா' 000) | **31.03.2017 ஆம் திகதி** (ரூபா' 000) |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் : சாதாரண பங்குகள் | 4000 | 3000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - காணி | 500 | - |
| பொது ஒதுக்கம் | 1200 | 1000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 2500 | 2000 |

ii 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானவரிச் செலவு, வரிக்கு முன்னரான இலாபத்தில் 10% என மதிப்பிடப்பட்டிருந்தது.

iii 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்காகச் செலுத்திய பங்கிலாபம் ரூபா 200 000 ஆகக் காணப்பட்டதுடன் வருடத்தினுள் நிறுத்தி வைத்த வருவாயிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு தொகையொன்று மாற்றப்பட்டுள்ளது.

iv கம்பனிக்கு சொந்தமான காணி 31.03.2018 இல் மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னைய வருடத்தில் மீள்மதிப்பீட்டின்போது ரூபா 300 000 மீள்மதிப்பீட்டு குறையொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. இம் மீள்மதிப்பீடு சரியாகப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**16.** 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான இக்கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் எது?

(1) ரூ. 500 000 (2) ரூ. 810 000 (3) ரூ. 900 000
(4) ரூ. 1 000 000 (5) ரூ. 2 500 000 (.............)

**17.** 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான கம்பனியின் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எது?

(1) ரூ. 200 000 (2) ரூ. 300 000 (3) ரூ. 500 000
(4) ரூ. 800 000 (5) ரூ. 900 000 (.............)

**18.** LKAS 8 (கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) நியமத்திற்கேற்ப பின்வருவனவற்றுள் கணக்கீட்டு மதிப்பீடு / மதிப்பீடுகளின் மாற்றமாகக் கருதக்கூடியவை எது/ எவை?

A - சொத்தொன்றின் பயன்படு ஆயுட்காலம்
B - இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி
C - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைத் தேய்விடும் முறை

(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம்
(3) A, C மாத்திரம் (4) B, C மாத்திரம்
(5) A, B, C ஆகியன எல்லாம் (.............)

**19.** பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) க்குப் பதிவு செய்யப்பட்டுள்ள வணிகமாகிய வரையறுக்கப்பட்ட சுமுது கம்பனி 01.04.2016 இல் ரூபா 1 725 000 பெறுமதியான இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்துள்ளது. இப்பெறுமதியினுள் 15% VAT வரியும் உள்ளடங்கியுள்ளது. இவ்வியந்திரத்தின் எஞ்சிய பெறுமதி ரூபா 50 000 ஆகவும், பயன்படு ஆயுட்காலம் 10 வருடங்களாகவும் மதிப்பீடு செய்யப்பட்டது.

LKAS 16 (ஆதனம் பொறி மற்றும் உபகரணம்) நியமத்திற்கேற்ப இவ்வியந்திரத்தின் 31.03.2018 இலுள்ளவாறான கொண்டு செல் தொகை எது?

(1) ரூபா 1 200 000 (2) ரூபா 1 210 000
(3) ரூபா 1 365 000 (4) ரூபா 1 390 000
(5) ரூபா 1 507 500 (.............)

**20.** வரையறுக்கப்பட்ட களனி பொதுக் கம்பனியின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் 15.06.2018 இல் அங்கீகரிக்கப்பட்டது. 31.03.2018 தொடக்கம் 15.06.2018 வரையான காலப்பகுதியினுள் பின்வரும் நிகழ்வுகள் கம்பனியில் இடம்பெற்றிருந்தன:

A - 10.05.2018 இல் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 31.03.2018 நிறுவனத்தில் காணப்பட்ட பிரதான உற்பத்தி இயந்திரமொன்று அழிவுக்குட்பட்டு ரூபா 500 000 நட்டம் ஏற்பட்டது.
B - 28.02.2018 இல் இடம்பெற்ற கடன் விற்பனையின் காரணமாக உருவான ரூபா 50 000 கடன்பட்டோர் 05.04.2018 இல் முறிவடைந்தவாராக நீதிமன்றம் அறிவித்திருந்தது.
C - ஊழியர் ஒருவரினால் 20.03.2018 இல் நிறுவனத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் நட்டஈடாக ரூபா 100 000 வை நிறுவனம் செலுத்த வேண்டும் என 20.04.2018 இல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.
D - 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கு சாதாரண பங்குதாரர்களுக்கு ரூபா 400 000 வை இறுதிப் பங்கிலாபமாக 10.06.2018 இல் பிரகடனப்பட்டிருந்தது.

LKAS 10 (அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்) நியமத்திற்கேற்ப 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுகளில் சீராக்க வேண்டிய நிகழ்வு/ நிகழ்வுகள் எது/ எவை?

(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம்
(3) B மாத்திரம் (4) B, C மாத்திரம்
(5) C, D மாத்திரம் (.............)

**21.** LKAS 07 (காசுப்பாய்ச்சல் கூற்று) நியமத்திற்கேற்ப செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் என்பவற்றிற்குரிய உருப்படிகளை முறையாகக் காட்டுவது எது?

(1) கடன் கொடுத்தோருக்கு காசு செலுத்துதல், பங்குகளைக் கொள்வனவு செய்தல், வங்கிக் கடன்பெறல்
(2) கடன்பட்டோரிடமிருந்து காசு பெறல், பங்குகளைக் கொள்வனவு செய்தல், பங்கிலாபம் பெறல்
(3) வட்டி வருமானம் பெறல், காசு விற்பனை, வங்கியிலிருந்து கடன் பெறல்
(4) காசுக் கொள்வனவு, ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை, கடன் விற்பனை
(5) செயற்பாட்டுச் செலவுகளைச் செலுத்துதல், வங்கிக் கடனைச் செலுத்துதல், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு

(.............)

**22.** வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும், நிகழ்வுகளும் இடம்பெற்றன:

A - ஒதுக்கத்தை மூலதனமாக்கல்
B - உரிமை வழங்கலொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், சகல உரிமைகளும் தற்போதுள்ள பங்காளர்களுக்கு வழங்கப்படல்.
C - நிறுத்தி வைத்த வருவாயின் ஒரு பகுதி பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்படல்.
D - கட்டடம் முதல் முறையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மிகையொன்று ஏற்படல்.

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளில் இக்கம்பனியின் உரிமையாண்மையில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைவன எவை?

(1) A, B மாத்திரம் (2) B, D மாத்திரம்
(3) C, D மாத்திரம் (4) A, B, D மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம் (.............)

**23.** 31.03.2018 இல் சஹன் கம்பனியின் நடைமுறை விகிதம் 2:1 ஆகும். ஏனைய காரணிகள் மாறாது இருக்கும்போது இவ் விகிதத்தில் **அதிகரிப்பை** ஏற்படுத்தக் கூடிய கொடுக்கல் வாங்கல் பின்வருவனவற்றுள் எது?

(1) கடனுக்குப் பொருட்கள் கொள்வனவு
(2) கடன் கொடுத்தோருக்குக் காசு செலுத்துதல்
(3) நடைமுறை அல்லாப் பொறுப்பினைத் தீர்த்தல்
(4) கடன்பட்டோர் பொருட்களைத் திருப்பியனுப்புதல்
(5) வணிகத்தின் பாவனைக்காக மோட்டார் வாகனமொன்றை கடனுக்குக் கொள்வனவு செய்தல்

(.............)


**24.** வரையறுக்கப்பட்ட சுகன்யா வணிகத்தின் நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்களில் சில பின்வருமாறு:


| **31.03.2018 இல்** | ரூ.'000 | **31.03.2018** முடிவடைந்த வருடத்திற்கான | ரூ.'000 |
|---|---|---|---|
| கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனம் | 6 000 | விற்பனைக் கிரயம் | 16 000 |
| நிறுத்திவைத்த வருவாய் | 4 000 | மொத்த இலாபம் | 8 000 |
| பொறுப்புக்கள் | 2 000 | | |


வரையறுக்கப்பட்ட சுகன்யா கம்பனியின் மொத்தச் சொத்துக்களின் புரள்வு வீதம் (தடவைகள்) எது?


(1) 0.33 (2) 0.5 (3) 1
(4) 1.33 (5) 2 (.............)

**25.** உற்பத்தி வணிகமொன்றின் கிரய நடத்தையினைக் காட்டுகின்ற பின்வரும் வரைபடங்களில் அலகொன்றிற்கான மாறும் கிரயம் மற்றும் மொத்த மாறும் கிரயக் கோட்டினைக் காட்டும் வரைபடங்களை எவை?

(A)



(B)





(1) A, B, C மாத்திரம் (2) A, B, D மாத்திரம
(3) B, C மாத்திரம (4) B, D மாத்திரம
(5) C, D மாத்திரம (............)

**26.** பின்வரும் உருப்படிகளுள் மேந்தலைக் கிரயங்களை மாத்திரம் உள்ளடக்கியது எது?
A - ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஆடை தைக்கும் பெண்களின் சம்பளம்
B - பாதுகாப்புச் சேவையினை வழங்கும் நிறுவனமொன்றின் பாதுகாப்பு ஊழியர்களிற்கான சம்பளம்
C - தளபாட உற்பத்தி நிறுவனமொன்றின் முகாமையாளரின் சம்பளம்
D - முடிவுப்பொருட்கள் விற்பனை நிலையமொன்றின் விற்பனை ஊழியருக்கான சம்பளம்
E - பாண் வெதுப்பகமொன்றின் பாண் வேகவைப்பவர்களுக்கான சம்பளம்

(1) A, C மாத்திரம் (2) A, B, C மாத்திரம் (3) B, D மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) C, D மாத்திரம் (............)

**27.** உற்பத்தி வணிகமொன்று மூலப்பொருள் கட்டுப்பாட்டிற்கு பயன்படுத்துகின்ற ஆவணங்கள் தொடர்பிலான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன:

A - உற்பத்திப் பிரிவினால் களஞ்சியத்திற்கு மூலப்பொருட்களை திருப்பியனுப்புவதற்காக வரவுத்தாள் பயன்படுத்தப்படும்.
B - வழங்குநர்களிடமிருந்து கிடைக்கின்ற மூலப்பொருட்களை பரீட்சித்துப் பொறுப்பேற்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஆவணம் பொருள் பெறுவனவுப் பத்திரமாகும்.
C - உற்பத்திப்பிரிவினால் மூலப்பொருட்களை களஞ்சியத்திலிருந்து கோருவதற்கு பொருள் வேண்டுகோள் பத்திரம் வழங்கப்படுகின்றது.
D - மூலப்பொருட்களை கொள்வனவு செய்யுமாறு களஞ்சியத்தினால் கொள்வனவுப் பிரிவிற்கு வழங்கப்படும் ஆவணம் கொள்வனவுக் கட்டளையாகும்.
மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் சரியான கூற்றுக்கள் எவை?

(1) A , B மாத்திரம் (2) A, B, C மாத்திரம்
(3) A, C மாத்திரம் (4) B, C மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம் (............)

**28.** பின்வரும் தகவல்கள் PM எனப்படுகின்ற மூலப்பொருள் உருப்படியொன்றுடன் தொடர்புடையதாகும்.

| | | |
|---|---|---|
| வாரமொன்றின் சராசரிப் பாவனை | 40 | கிலோ |
| வாரமொன்றின் இழிவுப் பாவனை | 30 | கிலோ |
| மறு கட்டளைத் தொகை | 280 | கிலோ |

விநியோகக் காலம் 06 - 09 வாரங்கள்

PM மூலப்பொருள் உருப்படியின் **உச்ச மற்றும் இழிவு இருப்பு மட்டங்களை** முறையாகக் காட்டுவது எது?

(1) 360 கிலோ, 120 கிலோ
(2) 360 கிலோ, 150 கிலோ
(3) 375 கிலோ, 180 கிலோ
(4) 550 கிலோ, 120 கிலோ
(5) 550 கிலோ, 150 கிலோ (............)

**29.** உற்பத்திக் கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உருப்படியொன்று தொடர்பிலான தகவல்களில் சில பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| அலகொன்றின் கொள்வனவு விலை | - | ரூபா 125 |
| கட்டளைக் கிரயம் | - | கட்டளையொன்றிற்கு ரூபா 150 |
| அலகொன்றை வைத்திருப்பதற்கான கிரயம் | - | அலகுக்கான கொள்வனவு விலையில் 10% |
| மாதாந்தக் கேள்வி | - | 5000 அலகுகள் |

மூலப்பொருள் உருப்படிக்குரிய சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) எது?

(1) 800 (2) 1 000 (3) 1 200
(4) 1 500 (5) 1 600 (............)

**30.** வணிகமொன்று கவனத்தில் கொண்டுள்ள **X** மற்றும் **Y** ஆகிய இரு முதலீட்டுச் செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இம்முதலீட்டுக்கு நிறுவனத்திடம் காணப்படுகின்ற காசு ரூபா 200 000 ஆகும். நிறுவனத்தின் நியம திரும்பப்பெறும் காலம் ஆகக்கூடியது 03 வருடங்களாகும்.

| | **X செயற்றிட்டம்** | **Y செயற்றிட்டம்** |
|---|---|---|
| ஆரம்ப முதலீடு (ரூபா) | 200,000 | 200,000 |
| திரும்பப்பெறும் காலம் (வருடங்கள்) | 4 | 2 |
| தேறிய நிகழ்காலப் பெறுமதி (ரூபா) | 60,000 | 52,000 |

மேலே தரப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பிலான சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.

A - திரும்பப்பெறும் கால முறைக்கேற்ப X செயற்றிட்டத்தை தெரிவு செய்தல் பொருத்தமானது.
B - திரும்பப்பெறும் கால முறைக்கேற்ப Y செயற்றிட்டத்தை தெரிவு செய்தல் பொருத்தமானது.
C - தேறிய நிகழ்காலப் பெறுமதிக்கேற்ப X செயற்றிட்டத்தை தெரிவு செய்தல் பொருத்தமானது.
D - தேறிய நிகழ்காலப் பெறுமதிக்கேற்ப Y செயற்றிட்டத்தைத் தெரிவு செய்தல் பொருத்தமானது.
E - தேறிய நிகழ்காலப் பெறுமதி மற்றும் திரும்பப் பெறும் கால முறைக்கேற்ப இவ்விரு செயற்றிட்டங்களும் பொருத்தமானது.

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் சரியானவை எவை?

(1) A, C மாத்திரம் (2) A, D மாத்திரம்
(3) B, C மாத்திரம் (4) B, D மாத்திரம்
(5) E மாத்திரம் (............)

- **இலக்கம் 31 வரையான 50 வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை புள்ளிகள் கோட்டின் மீது எழுதுக.**

**31.** பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் தொடர்பான கணக்கீட்டு மூலங்களைக் குறிப்பிடுக.

| **கணக்கு** | **மூலங்கள் (Element)** |
|---|---|
| 1. நன்மதிப்பு | .................................... |
| 2. வருமதி சந்தா | .................................... |
| 3. பற்றுக்கள் | .................................... |
| 4. ஊழியர் இழப்பீட்டிற்கான ஏற்பாடு | .................................... |

**32.** கிசான் வணிகத்தின் 2018 ஜனவரி மாதத்திற்கான விற்பனை நாளேடு கீழே தரப்பட்டுள்ளது.

**விற்பனை நாளேடு**

| திகதி | பட்டியல் இலக்கம் | வாடிக்கையாளர் | பெறுமதி ரூ.'000 | VAT ரூ.'000 | மொத்தப் பெறுமதி ரூ.'000 |
|---|---|---|---|---|---|
| 05/01 | 434 | விஷால் | 800 | 120 | 920 |
| 20/01 | 435 | ரஹ்மான் | 600 | 90 | 690 |
| 31/01 | | பொதுப் பேரேட்டிற்கு மாற்றியது | 1 400 | 210 | 1 610 |

ஜனவரி மாதத்தில் விற்பனை நாளேட்டிலிருந்து பொதுப்பேரேட்டிற்கு மாற்றுவதற்கான நாட்குறிப்புப் பதிவினை எழுதுக.

பொது நாளேடு

| திகதி | விபரம் | வரவு<br>ரூ.'000 | செலவு<br>ரூ.'000 |
|---|---|---|---|
| ......... | ..................................................................................................... | ............ | ............ |
| | ..................................................................................................... | ............ | ............ |
| | ..................................................................................................... | ............ | ............ |
| | ..................................................................................................... | ............ | ............ |

**33.** வரையறுக்கப்பட்ட துமிந்த கம்பனியானது மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் கம்பனி என்பதுடன் 31.03.2018 இல் இக்கம்பனியின் இருப்பின் கிரயம் ரூபா 500 மில்லியனாகும். தொழில்நுட்ப கோளாறு காரணமாக, அதில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 100 மில்லியன் கிரயம் கொண்ட மோட்டார் வாகனமொன்றின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலை ரூபா 75 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன், அவ்விலைக்கு அதனை விற்பனை செய்ய வேண்டுமாயின் ரூபா 15 மில்லியன் செலவில் அதனை நவீனமயப்படுத்தவும் வேண்டும்.

(அ) 31.03.2018 இல் இருப்பின் தேறிய தேறத்தக்க பெறுமதியைக் கணிக்க. ரூ. ...................................

(ஆ) இருப்பினைப் பதிவழிப்பதற்கான நாட்குறிப்பு பதிவினை எழுதுக.

பொது நாட்குறிப்பேடு

| திகதி | விபரம் | வரவு<br>ரூ. மில்லியன் | செலவு<br>ரூ. மில்லியன் |
|---|---|---|---|
| ......... | ..................................................................................................... | ..................... | ..................... |
| | ..................................................................................................... | ..................... | ..................... |
| | ..................................................................................................... | ..................... | ..................... |
| | ..................................................................................................... | ..................... | ..................... |

**34.** பிரசாந்த் வணிகம் 31.03.2018 ல் தயாரித்த பரீட்சை மீதி சமப்படவில்லை. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன :

(1) காசுக் கொடுப்பனவு நாளேட்டின் “கழிவு” நிரலின் மொத்தம் ரூபா 6 000 ஆனது பெற்ற கழிவுக் கணக்கிலும், கடன்பட்டோர் கணக்கிலும் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(2) திலீபனிடம் கடன் கொள்வனவு ரூபா 50 000 ஆனது கடன் கொடுத்தோர் பேரேட்டிலுள்ள அவரது கணக்கில் ரூபா 500 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) பொது நாளேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த வைப்புச் செய்யப்பட்ட ரூபா 20 000 காசோலையொன்று மறுக்கப்பட்டமை தொடர்பில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப்பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் காசுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

31.03.2018 இல் பரீட்சை மீதியின் மொத்தமானது வரவு நிரலிலா அல்லது செலவு நிரலிலா குறைவாகக் காணப்பட்டது என்பதையும் அத்தொகையினையும் தருக.

நிரல் .............................. பெறுமதி ரூ. ..................................

**35.** பின்வரும் தகவல்கள் சுசில் வணிகத்தின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்குரியதாகும்.

| | | ரூ. '000 |
|---|---|---|
| 31.03.2018 | இல் உரிமையாண்மை | 670 |
| 01.04.2017 | இல் சொத்துக்களும் பொறுப்புக்களும் : | |
| | நடைமுறை அல்லாச் சொத்துக்கள் | 500 |
| | நடைமுறைச் சொத்துக்கள் | 50 |
| | மொத்தப் பொறுப்புக்கள் | 185 |
| 31.03.2018 | இல் முடிவடையும் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட பொருள்பற்று | 50 |
| 31.03.2018 | இல் முடிவடையும் வருடத்தினுள் சுசில் தனது தனிப்பட்ட வங்கிக் கணக்கிலிருந்து மேலதிக மூலதனமாக ரூபா 140 000 இனை முதலிட்டுள்ளார். | |

31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கு வணிகத்தின் இலாபம் : ரூபா ...................................

**36.** வரையறுக்கப்பட்ட மோகன் பொதுக் கம்பனியானது ரூபா 5 000 000 பெறுமதி கொண்ட மோட்டார் வாகனமொன்றை 01.04.2017 இல் வரையறுக்கப்பட்ட களனி பொதுக்கம்பனியிடமிருந்து குத்தகை முறையில் கொள்வனவு செய்தது.
குத்தகைக் காலம் 7 வருடங்களாகும். குத்தகைக் கடன் கொடுப்பனவானது சமமான தவணைகளில் செலுத்தப்படும்.
31.03.2018 இல் செலுத்தப்பட்ட முதலாவது தவணைக் கட்டணம் ரூபா 1 000 000 ஆகும். (இத்தவணைக் கட்டணத்தினுள் வட்டி ரூபா 120 000 வும் உள்ளடங்கியுள்ளது)
இரண்டாவது வருடத்தின் வட்டிச் செலவு ரூபா 100 000 ஆகும்.

மேலே தரப்பட்ட தகவல்களுக்கேற்ப 31.03.2018 இல் வரையக்கப்பட்ட மோகன் பொதுக் கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றினுள் உள்ளடக்கப்படவேண்டிய பின்வரும் உருப்படிகளின் பெறுமதிகளைத் தருக.

1. நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் : (ரூபா) ..............................
2. நடைமுறை பொறுப்பு : (ரூபா) ..............................

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 37 ஆம் 38 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**
வணிகமொன்றின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனை மற்றும் 31.03.2018 இல் சரக்கிருப்பு என்பவற்றின் பெறுமதி முறையே ரூபா 2 500 000 ம் ரூபா 150 000 எனத் தெரியவந்துள்ளது. இவற்றின் பெறுமதிகளைக் கணிப்பிடும்போது பின்வரும் தகவல்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை:

1. 2018 மார்ச் மாதத்தில் 'விற்பனை அன்றேல் திருப்புக' எனும் அடிப்படையில் ரூபா 125 000 பட்டியல் விலை கொண்ட பொருட்கள் அனுப்பப்பட்டிருந்தன. இவ்விற்பனை தொடர்பில் எப்பதிவுகளும் ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை. அந்த இருப்பில் 50% மாத்திரம் 31.03.2018 இல் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், விற்பனை விலையானது கிரயத்தில் 25% இலாபம் சேர்த்து தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்பொருட்களைத் திருப்பியனுப்பவேண்டிய காலம் முடிவடைந்திருக்கவில்லை.
2. 31.03.2018 இல் களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பின் கிரயம் ரூபா 250 000 ஆகும்.

**37.** 31.03.2018 இல் முடிவடையும் வருடத்தில் வருமானக் கூற்றில் காட்டவேண்டிய விற்பனை வருமானம் ரூபா ............................

**38.** 31.03.2018 இல் நிதிநிலைமைக் கூற்றில் காட்டவேண்டிய இருப்பின் பெறுமதி
ரூபா ............................

**39.** 31.03.2018 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான தளபாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ரூபா |
|---|---|
| பலகைகளின் கொள்வனவு (1000 சதுர அடிகள்) | 250 000 |
| பயன்படுத்திய நிறப்பூச்சுக்களுக்கான கிரயம் | 30 000 |
| பயன்படுத்திய மணற் கடதாசிகளுக்கான கிரயம் | 5 000 |
| தச்சர்களின் சம்பளம் (ஒரு தளபாடத்திற்கு) | 1 500 |
| உற்பத்தி இயந்திரத்தின் கிரயம் | 800 000 |

இயந்திரத்தின் பயன்படு ஆயுட்காலம் 20 வருடங்கள் ஆகும். எஞ்சிய பெறுமதி எதுவுமில்லை.

01.01.2018 இல் மூலப்பொருள் இருப்பு எதுவும் காணப்படவில்லை என்பதுடன், 31.03.2018 இல் எஞ்சியிருந்த பலகைகளின் இருப்பு 200 சதுர அடிகளாகும்.
தொழிற்சாலைக்கான வருடாந்த வாடகைக் கட்டணம் ரூபா 60 000 ஆகும். தளபாடமொன்றை உற்பத்தி செய்வதற்கு 10 சதுர அடிப்பலகைகள் பயன்படுத்தப்படுகின்றன.
31.03.2018 இல் முடிவடையும் மூன்று மாதங்களுக்கான மூலக்கிரயம் மற்றும் உற்பத்தி மேந்தலைக் கிரயம் என்பவற்றைக் கணிக்க.

1. மூலக்கிரயம் ரூபா ............................
2. உற்பத்தி மேந்தலைக் கிரயம் ரூபா ............................

**40.** வரையறுக்கப்பட்ட சசினி கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றின் பிரித்தெடுப்பு கீழே தரப்பட்டுள்ளது :

(A) ⟶ வரையறுக்கப்பட்ட சசினி கம்பனி
(B) ⟶ 31.03.2018 இல்
நிதிநிலைமைக் கூற்று

(ரூ.'000)

| | | |
|---|---|---|
| (C) ⟶ **நடைமுறை அல்லாச் சொத்துக்கள்** | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | | xxx |
| **நடைமுறைச் சொத்து** | | |
| இருப்பு | | xxx |
| (D) ⟶ வியாபார வருமதிகள் | | xxx |

மேலே A, B, C மற்றும் D ஆகிய எழுத்துக்களின் மூலம் காட்டப்பட்டுள்ள உருப்படிகளுக்கு அடிப்படையாகவுள்ள கணக்கீட்டு எண்ணக்கருக்களைத் தருக.

| **குறியீடு** | **எண்ணக்கரு** |
|---|---|
| A | ---------------------------------------- |
| B | ---------------------------------------- |
| C | ---------------------------------------- |
| D | ---------------------------------------- |

**41.** வினோத், சிந்து மற்றும் மாலா என்போர் மொத்த மூலதனமாக ரூபா 1 200 000 இட்டு 31.03.2017 இல் பங்குடைமை வணிகமொன்றை ஆரம்பித்ததுடன் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் நடைமுறைக் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது :

நடைமுறைக் கணக்கு (ரூபா)

| | வினோத் | சிந்து | மாலா | | வினோத் | சிந்து | மாலா |
|---|---|---|---|---|---|---|---|
| மீ/கீ/வ | - | 15 000 | - | மீ/கீ/வ | 20000 | - | 30000 |
| | | | | சம்பளம் | 40000 | 40000 | 40000 |
| பற்றுக்கள் | 20000 | - | - | மூலதன வட்டி | 50000 | 40000 | 30000 |
| | | | | இலாபப் பங்கு | 60000 | 40000 | 20000 |
| மீ/கீ/செ | 150000 | 105000 | 120000 | | | | |
| | 170000 | 120000 | 120000 | | 170000 | 120000 | 120000 |

பின்வருவனவற்றைக் கணிக்க.

1. மூலதன வட்டி வீதம் ......................................................
2. 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான பங்குடைமையின் தேறிய இலாபம் ரூபா ..........................................
3. 31.03.2018 இல் உள்ளபடியான பங்குடைமையின் தேறிய சொத்துக்கள் ரூபா ............................................

**42.** இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியம இலக்கம் (SLFRS) 15க்கு (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களின் மூலம் உருவாகின்ற வருமானம்) ஏற்ப வருமானங்களை இனங்காணும்போது பின்பற்றவேண்டிய 05 படிமுறைகளை ஒழுங்குமுறையாகத் தருக.

1. ..............................................................................................................................................
2. ..............................................................................................................................................
3. ..............................................................................................................................................
4. ..............................................................................................................................................
5. ..............................................................................................................................................

**43.** வரையறுக்கப்பட்ட ரேணுகா பொதுக்கம்பனியானது 01.04.2018 இல் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து பங்கொன்று ரூபா 25 வீதம் 400 000 சாதாரண பங்குகளை ஆரம்ப வழங்கல் செய்தது. 500 000 பங்குகளுக்கு விண்ணப்பத்துடன் காசு கிடைக்கப்பெற்றது. சகல விண்ணப்பதாரிகளுக்கும் விகிதாசார அடிப்படையில் பங்குகள் ஒதுக்கம் செய்யப்பட்டதுடன், மேலதிகப் பணம் திருப்பி அனுப்பப்பட்டது.

(அ) விண்ணப்பங்களுக்கு காசு கிடைத்தல், மேலதிகமான கிடைக்கப்பெற்ற காசினை திருப்பியனுப்புதல் என்பவற்றைப் பதிவு செய்வதற்குத் தேவையான நாட்குறிப்புப்பதிவுகளை எழுதிக்காட்டுக.

(ரூ.'000)

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 1. ........................................................................................ | ................. | ................. |
| ........................................................................................ | ................. | ................. |
| (விண்ணப்பத்துடன் காசு கிடைத்தல்) | | |
| 2. ........................................................................................ | ................. | ................. |
| ........................................................................................ | ................. | ................. |
| (மேலதிக காசை திருப்பியனுப்புதல்) | | |

(ஆ) 01.04.2018 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கின் மீதி எவ்வளவு?
ரூபா ..................................................

**44.** உற்பத்திக் கம்பனியொன்று மூலப்பொருள் உருப்படியொன்றை விநியோகிப்பதற்கான விலையிடலாக 'முதல் - உள் - முதல் - வெளி' முறை (FIFO) யினை பயன்படுத்துகின்றது. 2018 மார்ச் மாதத்திற்கான அம்மூலப்பொருள் உருப்படியொன்றுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| திகதி | விபரம் | தொகை (அலகுகள்) | அலகொன்றின் விலை (ரூ.) |
|---|---|---|---|
| 01.03.2018 | மீதி | 600 | 12 |
| 12.03.2018 | கொள்வனவுகள் | 1000 | 10 |
| 15.03.2018 | விநியோகம் | 800 | ? |
| 20.03.2018 | கொள்வனவுகள் | 1000 | 11 |
| 28.03.2018 | விநியோகம் | 900 | ? |

இந்த உற்பத்திக் கம்பனியில் :

(அ) 2018 மார்ச் மாதத்தில் உற்பத்திக்காக விநியோகிக்கப்பட்ட பொருட்களின் கிரயம் ரூபா ..........................

(ஆ) நிறையிடப்பட்ட சராசரி முறையினை (WAC) பின்பற்றியிருப்பின் 2018 மார்ச் 31 இல் காணப்பட்ட இருப்பின் கிரயம் ரூபா ...................................

**45.** வணிக நிறுவனமொன்றின் ஊழியர்களின் சம்பளம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஊழியர் சேமலாப நிதி (EPF) க்கான ஊழியர் மற்றும் வேலை கொள்வோரின் பங்களிப்பு முறையே 10%, 15% ஆகும்.

| | **31.03.2018 இல்** | **01.03.2018 இல்** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| செல்மதி ஊழியர் சேமலாப நிதி (EPF) | 150 000 | 125 000 |
| ஊழியர் கடன் கணக்கு - சமன் | 90 000 | 100 000 |

மேலதிகத் தகவல்கள் :

(1) சமனுக்கு 28.02.2018 இல் வட்டியின்றி கடன் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது தவணைக் கட்டணம் 2018 மார்ச் மாதச் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டது.

(2) ஊழியர் சேமலாப நிதியானது (EPF) அடுத்து வரும் மாதத்தின் 05 ஆம் திகதி செலுத்தப்படும்.

